# இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 400
சனி, 18 யூலை, 2026 |
பக்கங்கள் 17
www.ilakku.org













# “இலங்கையின் நீதி வழங்கல் தோல்விக்குச் செம்மணியே சாட்சி” – சர்வதேச அமைப்பொன்று அறிக்கை



இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதிலும், அவர்களுக்கான நீதியை நிலைநாட்டுவதிலும் இலங்கை அரசாங்கங்கள் தொடர்ச்சியாகத் தோல்வியடைந்துள்ளமைக்கு யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழியே மிகச்சிறந்த சான்றாக மாறியுள்ளது என்று சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது.

“செம்மணி மனிதப் புதைகுழியில் நாங்கள் இன்னமும் தேடிக்கொண்டிருக்கின்றோம்” என்ற தலைப்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள புதிய அறிக்கையிலேயே இந்த விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன. செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தில் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான இராணுவ அதிகாரிகள் எவரும் இதுவரையில் தண்டிக்கப்படவில்லை என்று அந்த அறிக்கை கடுமையாக விமர்சித்துள்ளது.

மாறாக, இத்தகைய மனித உரிமை மீறல்கள் மற்றும் அத்துமீறல்கள் இடம்பெற்ற காலத்தில் அந்தப் பகுதிகளில் கடமையாற்றிய இராணுவ அதிகாரிகள் பலர், பின் நாட்களில் இராணுவத்தின் உயரிய பதவிகளுக்குத் தரம்

தொடர்ச்சி: பக்கம் 14

## தற்போதைய அரசாங்கத்தின் கீழ் தமிழ் மக்களுக்கு நிவாரணம் கிடைக்காது: சி. வி. விக்னேஸ்வரன்



தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் தமிழ் மக்களுக்கு நிவாரணம் கிடைக்குமென எதிர்பார்க்க இயலாது என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“ஆறு தமிழ் பேசும் அரசியல் கட்சிகளின் இணைப்பு ஒரு நேர்மறையான அறிகுறியாகும். தாங்கள் பிரதிநிதித்துவப் படுத்தும் மக்களுக்கு சிங்களம் பேசும் கட்சி களிடமிருந்து எந்த நிவாரணமும் கிடைக்காது என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே இந்த முடிவை அவர்கள் எடுத்துள்ளதாக சி.வி. விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்டில் உள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் எதிர்காலத்தைக் கருத்திற்

தொடர்ச்சி: பக்கம் 15

## மன்னார் கனிம மணல் அகழ்வு விவகாரம்: வாக்குறுதியை அரசாங்கம் மீறியுள்ளதாகக் குற்றச்சாட்டு




மன்னார் பகுதியில் கனிம மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என்று பொதுமக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை ஜனாதிபதியும் தற்போதைய அரசாங்கமும் முற்றாக மீறியுள்ளது என்று சுற்றுச் சூழல் பொருளாதார பாதுகாப்பு அமைப்பின் பிரதிநிதி சுவஸ்திகா அருளிங்கம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று (17) கைத்தொழில் அமைச்சிடம் கனிம மணல் அகழ்வுக்கு எதிரான கோரிக்கைகளை முன்வைத்த பின்னர், ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மன்னார் காற்றாலைத் திட்டத்துக்கு எதிராக மக்கள் போராடிய போது, நாட்டின் சமயத்தலைவர்கள் முன்னிலையில் “மக்கள் காற்றாலைத் திட்டத்தை ஏற்றுக்கொண்டால், மன்னாரில் கனிம மணல் அகழ்வுக்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்” என்று ஜனாதிபதி

தொடர்ச்சி: பக்கம் 15

# எண்ணெய் விலை 110 டொலரைத் தாண்டக்கூடும் – கோல்ட்மேன்




தொடர்ந்து நான்காவது நாளாக எண்ணெய் விலை உயர்ந்துள்ள நிலையில், இலையுதிர் காலத்திற்குள் ப்ரென்ட் விலை 110 டொலரைத் தாண்டக்கூடும் என கோல்ட்மேன் தற்போது கடந்த வியாழக்கிழமை(16) எச்சரித்துள்ளது. ப்ரென்ட் விலை 0.4 சதவீதம் உயர்ந்து 85.28 டொலராக இருந்தது, WTI விலை 80 டொலரைக் கடந்து 80.02 டொலராக உயர்ந்தது. மீண்டும் தொடங்கிய இராணுவ நடவடிக்கை, முற்றுகை மற்றும் ஜலசந்தியில் தடைபட்ட போக்குவரத்து ஆகியவற்றின் காரணமாக இந்த நான்கு நாள் விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

வளைகுடா நாடுகளின் ஏற்றுமதி தொடர்ந்து கட்டுப்படுத்தப்பட்டால், நான்காவது காலாண்டில் ப்ரென்ட் விலை 110 டொலரைத் தாண்டக்கூடும் என கோல்ட்மேன் சாக்ஸ் கூறுகிறது.
இடைத்தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன்பு நான்காவது காலாண்டு முடிவடைவதால், இந்தக் கணிப்பின் காலக்கெடு நேரடியாகத் தேர்தலுடன் ஒத்துப்போகிறது. கோல்ட்மேனின் இந்த எண், காலக்கெடு குறித்த முழு விவாதத்தையும் புதிய கோணத்தில் காட்டுகிறது.

நான்காவது காலாண்டில் கச்சா எண்ணெய் விலை 110 டொலராக உயரும் என்பது, இலையுதிர் கால தேர்தல் பிரச்சாரம் முழுவதும் எரிவாயு விலை உயரும் என்பதைக் குறிக்கிறது. இதுவே, ஜூன் மாதத்தில் ட்ரம்ப் தனது கொள்கையிலிருந்து பின்வாங்கியதன் நோக்கமாக இருந்ததும், பேச்சுவார்த்தைகளை மறுப்பதன் மூலம் ஈரான் வைக்கும் சவாலும் ஆகும்.

தொடர்ச்சி: பக்கம் 14

## ஹோர்முஸ் நீரிணைப் பாதையில் இந்திய மாலுமிகள் பணியாற்ற இந்தியா தடை



ஹோர்முஸ் வழித்தடங்களில் இந்திய மாலுமிகளைப் பணியமர்த்த வேண்டாம் என கப்பல் உரிமையாளர்களுக்கு இந்தியா கடந்த வியாழக்கிழமை(16) அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

இந்தியாவின் கப்பல் போக்குவரத்து தலைமை இயக்குநரகம், கப்பல் உரிமையாளர்கள், கப்பல் மேலாளர்கள் மற்றும் ஆள்சேர்ப்பு நிறுவனங்களிடம், “மறு உத்தரவு வரும் வரை ஹோர்முஸ் ஜலசந்தி வழியாகப் பயணம் மேற்கொள்ளும் கப்பல்களில் இந்திய மாலுமிகளைப் பணியமர்த்துவதைத் தவிர்க்க வேண்டும்” என்று கூறியுள்ளது.

இந்த வாரம் ஹோர்முஸ் ஜலசந்தி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் இரண்டு கப்பல்கள் மீது ஈரான் நடத்திய தாக்குதல்களில் இரண்டு இந்திய மாலுமிகள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

“பாரசீக வளைகுடா பிராந்தியத்தில் அதிகரித்துள்ள பாதுகாப்புச் சூழலைக் கருத்தில் கொண்டு அப்பகுதியில் இயங்கும் கப்பல்களில் பணியாற்றும் இந்திய மாலுமிகளின் நலன்களைப் பாதுகாக்க, மேம்படுத்தப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம் என இயக்குநரகம் கருதுகிறது,” என்று அந்த உத்தரவில் மேலும் கூறப்பட்டுள்ளது.

ஈரானுக்கு எதிரான அமெரிக்க-இஸ்ரேல் போர் தொடங்கிய பிப்ரவரி 28 முதல், ஹோர்முஸ் ஜலசந்தி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் நடந்த தாக்குதல்களில் குறைந்தது 14 மாலுமிகள் கொல்லப்பட்டுள்ளதாக ஐ.நா. கடந்த மாதம் தெரிவித்தது. ஜூன் 9 அன்று ஓமன் கடற்கரைக்கு அப்பால் செட்டெபெல்லோ எண்ணெய் கப்பல் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட மூன்று இந்தியக் கப்பல் ஊழியர்களும் இதில் அடங்குவர்.

## அமெரிக்காவின் தேசியக் கடன் 39.4 டிரில்லியன் டொலரை எட்டியுள்ளது



அமெரிக்காவின் தேசியக் கடன், திகைப்பூட்டும் வகையில் 39.4 டிரில்லியன் டொலர் என்ற புதிய சாதனையை எட்டியுள்ளது. கடந்த 12 மாதங்களில் மட்டும், இது 3.2 டிரில்லியன் டொலர் அளவுக்கு அதிகரித்துள்ளது.

2020-ஆம் ஆண்டிலிருந்து, மொத்த அதிகரிப்பு 16 டிரில்லியன் டொலரைத் தாண்டியுள்ளது; இது வெறும் 5 ஆண்டுகளில் ஏற்பட்ட சுமார் 68% உயர்வாகும். இந்தக் கடன் தற்போது ஒவ்வொரு மாதமும் சராசரியாக 209 பில்லியன் டொலர் என்ற அளவில் வளர்ந்து வருகிறது. இதே வேகம் தொடர்ந்தால், இந்த தசாப்தம் முடிவதற்குள் அமெரிக்கா 50 டிரில்லியன் டொலர் என்ற எல்லையைத் தாண்டிவிடும்.

இதில் குறிப்பாகக் கவலைக்குரிய விஷயம் வட்டிச் சுமைதான்: ஆண்டு கடன் செலுத்துதல்கள் தற்போது 1.1 டிரில்லியன் டொலரைத் தாண்டியுள்ளது, இது அமெரிக்காவின் முழு பாதுகாப்பு பட்ஜெட்டை விட அதிகம். வட்டி விகிதங்கள் இன்னும்

தொடர்ச்சி: பக்கம் 14

## ஆட்சியை மாற்ற நாங்கள் 1,50,000 வீரர்களை அனுப்பப் போவதில்லை – வான்ஸ்



இஸ்ரேலிய அரசாங்கத்தின் பிரதிநிதிகள் அமெரிக்காவில் பொதுமக்களின் கருத்தைத் திசைதிருப்பி, போர் காலவரையின்றித் தொடரும் வகையில் அதை மாற்ற முயற்சிக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும் என அமெரிக்காவின் துணை அதிபர் ஜே.டி வான்ஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் பல ஊடகங்களுக்கு தெரிவித்துள்ள கருத்துக்கள் வருமாறு:

“நன்கு நிதியளிக்கப்பட்ட ஒரு குழு, பேச்சுவார்த்தைகளைச் சீர்குலைக்கவும், சாத்தியமான எந்தவொரு உடன்பாட்டையும் அழிக்கவும் முயற்சிக்கிறது” என்று அமெரிக்கத் துணை ஜனாதிபதி கூறினார். “அவரது கூற்றுப்படி, சில தனிநபர்கள் முன்னாள் ட்ரம்ப் ஆலோசகர் ஒருவரிடமிருந்து பணம் பெறுகிறார்கள், அதற்குப் பதிலாக அந்த நபர், இஸ்ரேலிய அரசாங்கத்தின் பிரதிநிதிகளிடமிருந்து இழப்பீடு பெறுகிறார்.”

தொடர்ச்சி: பக்கம் 08

## ஆட்சி மாறினாலும் அரசின் நிகழ்ச்சி நிரல் மாறவில்லை - ஜான்சன் பிறிற்றோ

யாழ்ப்பாணத்தில் 2013 ஆம் ஆண்டு பாதுகாப்பு அமைச்சினால் கையகப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்ட 6 ஆயிரம் ஏக்கர் மக்களின் காணிகளுக்கான வர்த்தமானியை உடனடியாக நீக்க வேண்டுமென சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவனத்தின் இணைப்பாளர் ஜான்சன் பிரிடாரோ வலியுறுத்தியுள்ளார்.



நேற்று (17) வெள்ளிக்கிழமை யாழ். மயிலிட்டியில் 13 ஆவது வாரமாக நடைபெற்று வரும் காணி விடுவிப்புக்கான போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், மக்களின் காணிகள் மக்களுக்கு என கூறி ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கம் மக்களின் காணிகளை விடுவிப்பதில் தயக்கம் காட்டுகிறது.

2013 ஆம் ஆண்டு பாதுகாப்பு அமைச்சினால் கையகப் படுத்தப்பட்ட வலி வடக்கு மக்களின் சுமார் 6,000 ஏக்கர் காணிக்கான வர்த்தமானி அறிவித்தல் இதுவரை இரத்துச் செய்யப்படவில்லை.

தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி மயிலிட்டி மற்றும் பலாலி மக்கள் தொடர்ச்சியாக போராட்டங்களில் ஈடுபட்டு வரும் நிலையில் சில மாதங்களுக்கு முன்னர் கொழும்பிலும் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

ஆனால் பாதிக்கமட்ட மக்களின் குரல்களுக்கு தற்போதைய அரசாங்கமும் செவி சாய்க்காமல் கடந்த கால அரசாங்கங்களைப் போல அரசின் நிகழ்ச்சி நிரல்களுக்கு இயங்கும் அரசாங்கமாக செயல்பட்டு கொண்டிருக்கிறது.

தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழ் மக்களுடைய வளமான காணிகளை கையகப்படுத்தி 35 வருடங்கள் கடந்து விட்ட நிலையில் இன்று வரை பாதிக்கப்பட்ட மக்கள் தமது காணிக்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

பாதுகாப்புத் தேவையென காணியை சுவீகரித்துவிட்டு மக்களின் காணிகளில் விவசாயம் செய்து இராணுவம் மரக்கறிகளை விற்று வருமானம் ஈட்டுகிறார்கள் இது நாட்டின் திறைசேரிக்கா செல்கிறது.

ஆகவே மக்களின் காணிகள் மக்களுக்கு எனக் கூறிவரும் அரசாங்கம் விரைவாக மக்களின் காணிகளை மக்களிடம் ஒப்படைப்பதோடு வெளியிடப்பட்ட 6 ஆயிரம் ஏக்கருக்கான வர்த்தமானியையும் உடனடியாக நீக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

## டிட்வாவில் பாதிக்கப்பட்ட வேவண்டன் தோட்ட மக்கள் ஆர்ப்பாட்டத்தில்

கொத்மலை பிரதேச செயலகத்திற்குட்பட்ட வேவண்டன் தோட்டத்தின் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

பதாதைகள் ஏந்தி கோஷங்களை எழுப்பி வேவண்டன் தோட்டத்திலிருந்து கண்டி நுவரெலியா பிரதான பாதைக்கு பேரணியாக சென்று கெரண்டி எல்ல பிரதேசத்தில் அவர்கள் ஆர்ப் பாட்டத்தை மேற்கொண்டனர்.

சுமார் 48 குடும்பங்களை சேர்ந்த 200-க்கும் மேற்பட்டோர் இந்த பெருந்தோட்டத்தில் வசித்து வருகின்றனர். கடந்த டிட்வா காலத்தில் இந்த தோட்டத்துக்கு செல்லும் பிரதான பாதை முழுமையாக சேதம் அடைந்தது.

இதனால் இந்த தோட்டத்தில் உள்ள பாடசாலையும் தற்போது இயங்காமல் உள்ளது. டிட்வா காலத்தில் அருகில் உள்ள பாடசாலைகளில் தங்கி வந்த நிலையில் மீண்டும் தனது சொந்த இடமான வேவண்டன் தோட்டத்துக்கே சென்று வசித்து வருகின்றனர்.

இந்தநிலையில், அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து தருவதாக தெரிவித்த கொத்மலை பிரதேச செயலகம் கடந்த 9 மாதங்கள் கடந்தும் எந்த ஒரு அடிப்படை வசதியும் செய்து தரவில்லை என மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். தற்போது தோட்டத்துக்கான ஒரு கிலோ மீற்றர் கொண்ட பாதையை புணரமைத்து தரும்படி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## ஆசிரியர் தலையங்கம் | 18 யூலை, 2026

## சமத்துவமாக மதித்தல் சகோதரத்துவமாக நடத்தல் சுதந்திரமாக கண்ணியத்துடன் பேசுதலே இறைமையைப் பேணும்

சனநாயகத்தின் தாய் எனப்படும் பிரித்தானிய வெஸ்ட்மினிஸ்டர்ப் பாராளுமன்றம் இரண்டு ஆண்டுகள் அதன் பிரதமராகத் திகழ்ந்த மதிப்புக்குரிய கியர்ஸ்டாமர் அவர்களின் இறுதியான பிரதமருக்கான கேள்வி நேரத்தை 15.07. 2026 மதியம் எதிர்கொண்டது. இந்த கேள்வி நேரத்தில் எதிர்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் அவரைச் சமத்துவமாக மதித்து சகோதரத்துவமாக நடத்தி சுதந்திரமாக கண்ணியத்துடன் பேசி அன்பான பண்பான வழியனுப்பலைச் செய்தார்கள். இந்த வரலாற்று நிகழ்வு இறைமையைப் பேணுவதற்கு கட்சி நலன்கள் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் இந்த மூன்று பண்புகளும் நாட்டில் உள்ள ஒவ்வொரு குடிமக்களுக்கும் தேவை என்பதை உலகிற்கு மீண்டும் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார்கள் இதனை வரவேற்ற பிரித்தானியாவின் ஆங்கில நாளிதழ் த கார்டியன் தனது ஆசிரிய தலையங்கத்தை “கண்ணிய மான பிரியாவிடை – தேவையானவொன்று” என்று 16.07.2026 இல் தலையங்கமிட்டது.

இலங்கைத் தீவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக இன்று வரை தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் வாழ்ந்து வரும் ஈழத்தமிழர்கள் 22.05. 1972 அன்று சிறிலங்கா சிங்கள பௌத்த குடியரசின் வழி அரசற்ற தேசஇனமாக்கப்பட்ட வரலாற்றின் பின்னர் ஈழத்தமிழர்களின் தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளை மீளுறுதிப்படுத்த ஈழத்தமிழர்களிடையான தேசிய ஒருமைப்பாடே அதி முக்கிய தேவையாக உள்ளது. என்பதனை இலக்கு இவ்விடத்தில் ஈழத்தமிழர்களுக்கு நினைவுறுத்த விரும்புகிறது. இதனை கவனத்தில் எடுக்காது ஈழத் தமிழர்கள் சிலர் ஒருவரை ஒருவர் சமுக ஊடகங்களில் அரசியல் நாகரிமற்ற முறையில் வார்த்தைகளால் கடித்துக் குதறி ஆதாரங்களற்ற தேவையற்ற விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். தாயகத்தில் வாழ்ந்தாலும் உலகக் குடிகளாக எந்த நாட்டில் வாழ்ந்தாலும் “நான் சாகலாம் நீங்கள் சாகலாம் ஆனால் நாங்கள் சாகக் கூடாது” என்கின்ற ஈழத்தமிழர் தேசிய விடுதலைப்போராட்டத்தின் மூலமந்திரமான “நாங்கள்” என்ற அன்புநிலையைச் சகோதரத்துவ நிலையைப் பேணுவதன் மூலமே ஈழத்தமிழர்களின் தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்பி அரசற்ற தேசஇனத்தின் தேசநிர்மாணத்தை நடைமுறையில் முன்னெடுத்து அதன் இறைமையை மீளுறுதி செய்ய முடியும் என்பதை இலக்கு மீள்நினைவுறுத்த விரும்புகிறது.

மேலும் பிரித்தானியப் பிரதமர் அவர்களுக்கு அளிக்கப்பட்ட கண்ணியமான பிரியாவிடையில் எவ் வாறு பிரதான எதிர்க்கட்சியான கொன்சேர்வேடிவ் கட்சியின் தலைவி கெமி பாட்நொக் அவர்களும் மற்றைய கட்சித் தலைவர்களும் பிரதமர் கியர் ஸ்டாமர் சிறுவர்களுக்கும் பெண்களுக்கும் அவர்களின் உரிமைகளை நலன்களைப் பேணுவதற்குச் செய்த செய்ய முயன்றவற்றை அழகாக எடுத்துரைத்து தங்களின் இதய நன்றியை வெளிப்படுத்தினர் பிரதமரும் தனது உரையில் “ நான் சரிந்து போன பிரித்தானியப் பொருளாதாரத்தை வளர்க்க நெம்புகோலாக முயற்சித்தேன்” என்றே தனது உரையைத் தொடங்கி அவரது காலத்து மக்கள் நல செயற்பாடுகளை எடுத்துரைத்தார். ஆயினும் லேபர்கட்சி பொருளாதாரத்தை வளர்த்தல் என்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை நிலைப்படுத்த இயலாது போனமை ஸ்டாமர் நைஜில் பராக்கின் கையில் 10 டவுணிங் ஸ்ரீட்டின் திறப்பைக் கொடுத்து விடுவாரோ என்கிற அச்சத்தை லேபர் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களிடை தோற்றுவித்தமையே மக்களுக்குச் சமுக பொருளாதார மாற்றத்தை விரைவாகத் தரக்கூடிய புதிய பிரதமராக மதிப்புக்குரிய அன்ரிபேனம் அவர்களை 384 பிரித்தானிய லேபர்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் போட்டியின்றி யூலை 20ம் திகதி 10 டவுணிங் ஸ்ரீட்டுக்கு அனுப்பி வைக்கும் வரலாற்றுப் பரிணாமத்தை ஏற்படுத்தியுள்ளது. எவ்வளவு பெரும்பான்மை இருந்தாலும் மக்களின் தேவைகளை பிரச்சினைகளை அணுகி அதற்குரிய வகையில் தீர்வு காணப்பெறாவிட்டால் ஆட்சியில் தொடர இயலாது புதிய தலைமையை உருவாக்கும் என்ற உண்மையை ஸ்டாமரின் வெளியேற்றம் ஈழத்தமிழர்களுக்கு எடுத்துரைக்கிறது என்பது இலக்கின் கருத்தாகவுள்ளது.

அதே நேரத்தில் பிரித்தானிய வெஸ்ட்மினிஸ்ரர் பாராளுமன்றத்தின் 2வது சபையான பிரபுக்கள் சபை யினை ஸ்டாமரால் நீக்க முடியாத நிலை தொடர்ந்த நிலையில் “ பிரதேசங்களினதும் தேசஇனங்களதும் செனட் டாக” (Senate of regions and nations) ஆக மாற்றக்கூடிய வகையில் பிரதமர் ஸ்டாமர் இலண்டன் மேயர் மதிப்புக்குரிய சாதிக் கான் மற்றும் சிறுவர் வறுமை நீக்க அமைப்பின் செயற்பாட்டாளர் அலிசன் லோவ் முன்னாள் உணவுத் தரப்படுத்தல் முகவரகத்தின் தலைமை இயக்குனர் டிம் யே சிமித் போன்ற 26 உறுப்பினர்களை பிரபுக்கள் சபைக்கு நியமித்து விடைபெறுகின்றார். ஒருவர் தமது பதவி நிலையில் நின்று விடுபடும் நிலையிலும் நாட்டிற்கும் மக்களுக் கும் உரிய பங்களிப்பைக் கடைசி நிமிடம் வரை வழங்கிட வேண்டுமென்ற இந்த முன்மாதிரிகை ஈழத்தமிழர்களின் பிரதேசங்களினதும் தேசஇனங்களிதும் பேரவை ஒன்றை உலகளாவிய நிலையில் ஈழத்தமிழரின் நாளாந்தப் பிரச்சினைகளை அணுக அழைக்க வேண்டிய தேவையையும் உணர்த்துகின்றது. ஸ்டாமரின் பிரியாவிடை வெளிப்படுத்தும் பண்புகளை ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் மட்டுமல்ல சமுக ஊடகவியலாளர்களும் மனதிருத்தி தங்கள் பணிகளை கட்சி சார்புகளைக் கடந்து விருப்பு வெறுப்புகளுக்கு இடங்கொடாது செய்திட முன்னெடுக்க வேண்டும் என்பது இலக்கின் அழைப்பாகவுள்ளது.

மேலும் மதிப்புக்குரிய பிரதமர் கியர் ஸ்டாமர் அவர்களின் உக்ரேனின் பாதுகாப்புக்காக நிதிமதி மற்றும் நவீன ஆயுத வழங்கலுக்காக பிரான்சிய அரசத்தலைவர் மதிப்புக்குரிய மக்ரோனுடன் இணைந்து உருவாக்கிய “விருப்ப அடிப்படை அரசியல் கூட்டு” (Coalition of the Willing) நாடுகள் தங்களின் வேறுபாடுகளுக்கு இடையில் குறித்த ஒரு விடயத்தில் கூட்டாகச் செயற்படல் என்பது புதிய அரசியல் முறைமையொன்றை உருவாக்கி ஐரோப்பிய ஒன்றியத்தில் இல்லாத நிலையிலும் பிரித்தானியா தனது பங்களிப்பை ஐரோப்பியப் பாதுகாப்புக்குச் செய்யத்தக்க முறைமையைத் தோற்றுவித்தது. இதற்காகப் பிரியாவிடை பெறும் மதிப்புக்குரிய பிரதமர் கியர் ஸ்டார்மர் அவர்களுக்கு பிரான்சு அதனது வரலாற்றில் முதல்தடவையாக அதன் மீயுயர் விருதான “லீயூன் துநோர்” (Legion d’hnonneur) விருதினை வழங்கி மதிப்பளித்துள்ளது. அவ்வாறே உக்ரேன் அதனது மீயுயர் விருதான “ஓடர் ஒவ் த பிரீடம்” (Order of the Freedom) விருதை மதிப்புக்குரிய பிரதமர் கியர் ஸ்டாமர் அவர்களுக்கு அவர் பிரித்தானியப் பிரதமராக விளங்கும் பொழுதே அளித்து மதிப்பளித்துள்ளது. ஈழத்தமிழர்களும் அவர்கள் பல்வேறு அரசியல் நிலைப்பாடுகளுடன் சனநாயகத்தின் வழி பயணிக்கின்ற இன்றைய காலகட்டத்தில் ஈழத்தமிழர் தாயகத்துக்கும் மக்களுக்குமான பாதுகாப்புடன் கூடிய அமைதியை வளர்ச்சிகளை முன்னெடுக்கக் கூடிய விருப்புக்களில் கூட்டாகச் செயற்பட்டு தங்களின் கட்சி மற்றும் அமைப்பு வேறுபாடுகளைக் கடந்து மக்களுக்குச் சத்தியளித்தல் காலத்தின் தேவையாக உள்ளது.

மேலும் தேசிய விழிப்புணர்ச்சி தோன்றிய மக்களிடை அதனை அணைத்திட முடியாது என்பதற்கு உதார ணமாக இங்கிலாந்துக்கும் ஆஜன்ரீனாவுக்கும் இடையிலான உலகக் கோப்பை கால்பந்தாட்டத்தில் ஆஜன்ரீனா குழுவில் “ போக்லாந்தினர் ஆர்ஜன்டீனாவினரே” என்ற பதாகை வெற்றிக் களிப்புக்கு மத்தியில் உயர்த்தப்பட்டமை போர்க்லாந்துடன் மார்கிரெட் தச்சர் 1982 இல் போர் தொடுத்து அதனைத் தொடர்ந்தும் பிரித்தானியாவின் கடல் கடந்த எல்லைநிலமாக பிரித்தானியப் படைத்தளமாக நிறுவி 44 ஆண்டுகள் சென்றாலும் ஆர்ஜன்டினர்களுக்கு அது தங்களின் மண் என்கின்ற தேசிய விழிப்புணர்வு இன்றும் நீறு பூத்த நெருப்பாக உள்ளது.

அதே போல் 1983 இல் சிறிலங்கா ஈழத்தமிழின அழிப்பாக ஆடி இனஅழிப்பை நடாத்தி 43 ஆண்டுகள் சென்றாலும் இன்றும் ஈழத்தமிழர்கள் அதற்கான அனைத்துலக நீதியை கோரியவர்களாகவே இந்த 2026 யூலை மாதத்தையும் கறுப்பு யூலையாகவே முன்னெடுத்து 23 முதல் 25 வரை தாயகத்திலும் ஈழத்தமிழர்கள் புலம்பதிந்து வாழும் நாடுகளிலும் நீதிக்கான குரலை ஒருதேசமாக எழுப்புவதற்கு தம்மால் இயன்றளவுக்கு முயற்சித்து வருகின்றனர்.

ஆயினும் 1983 முதல் இன்று வரை ஈழத்தமிழின அழிப்பை தனது அரசியல் கொள்கையாகவும் ஈழத்தமிழர் உட்கட்டுமானச்சிதைப்பை தனது அரசியற்கோட்பாடாகவும் 43 ஆண்டுகளாகத் தொடரும் அரச பயங்கரவாதத்தின் ஊற்றான சிறிலங்காவை சனநாயக நாடாகவும் தங்களின் உயிரையும் உடைமைகளையும் நாளாந்த வாழ்வையும் சிறிலங்காவின் படைகளின் இனங்காணக்கூடிய அச்சத்தில் இருந்து பாதுகாக்க அனைத்துலகச் சட்டங்களுக்கு அமைவாகப் போராடிய போராடும் ஈழத்தமிழர்களை பயங்கரவாதிகள் எனவும் உலக அரசியல் வல்லாண்மைகள் பிராந்திய மேலாண்மைகள் சட்டப்பிரகடனங்கள் செய்து ஈழத்தமிழர்களின் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் வெளியகத்தன்னாட்சி உரிமையைப் பயன்படுத்தி உலக நாடுகளதும் உலக அமைப்புக்களதும் அனைத்துலக சட்டப் பாதுகாப்பை தமது வரலாற்றுத் தாயகத்தில் தாம் பாதுகாப்புடன் கூடிய அமைதி வாழ்வையும் வளர்ச்சிகளையும் பெற இயலாதவாறு செய்து வருகின்றன. எனவே இந்த யூலை மாதத்தை ஈழத்தமிழர் தமது மரபுரிமை மாதமாகத் தாம் வாழும் நாடுகளில் மாற்றி தம்முடைய அரசுகளுக்கும் தம்மோடு வாழும் மக்களுக்கும் பயங்கரவாதிகள் எனத் தமிழரை வகைப்படுத்திய நிலையினை மாற்றுவதற்குக் குரலெழுப்ப வேண்டிய மாதமாக இம்மாதம் உள்ளது. இதற்கு 1983 முதல் இன்று வரை இந்தப் பயங்கரவாதிகள் பிரிவினைவாதிகள் என்ற சொல்லாட்சிகள் வழி ஈழத்தமிழர்கள் தாங்கள் தாயகத்திலும் புலம்பதிந்து வாழும் நாடுகளிலும் எவ்வாறு பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்ற பதிவுகளைச் சான்றாதரங்களுடன் ஆவணப்படுத்த வேண்டும். இதுவே இந்த 1983 யூலை சிறிலங்காவின் ஈழத்தமிழின அழிப்புக்கான அனைத்துலக நீதியைப் பெறுவதற்கான இன்றைய தலையாய தேவையாக உள்ளது என்பது இலக்கின் இவ்வாரக் கருத்தாகவும் அழைப்பாகவும் உள்ளது.

**ஆசிரியர்**




# ‘புதுக்கூட்டு’ கட்சிகளின் பழைய நினைவுகள்

விதுரன்

சமகால அரசியல் நிலைமைகளில், சிறுபான்மை இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கியமான ஆறு கட்சிகள் புதிய அரசியல் நாடகத்திற்கான அத்தி வாரத்தைப் போட்டுள்ளன.



தமிழ், முஸ்லிம் மற்றும் மலையக மக்களின் பொது வான பிரச்சினைகள் தொடர்பாக, ஒரு பொதுத்தளத்தில் ஒன்றிணைந்து செயற்படப்போவதாக ஆறு தமிழ்ப் பேசும் அரசியல் கட்சிகள் கொழும்பில் நடத்திய கூட்டு ஊடக சந்திப்பில் உத்தியோகபூர்வமாக கடந்த திங்கட் கிழமையன்று(13-07) அறிவித்திருக்கின்றன.

வடக்கு-கிழக்கு தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் இலங்கை தமிழரசுக் கட்சி மற்றும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, மலையகத் தமிழ் மக்களின் குரலாக ஒலிப்பதாகக் கூறும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி, முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய ஆறு கட்சிகளுமே இந்த இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன.

ஆனால், இந்த அவசரக் கூட்டு உருவான சூழ லையும், அதன் பின்னணியையும் உற்றுநோக்கினால், இது மக்களின் விடிவிற்காக உதித்த கூட்டணியா அல்லது அண்மைய அரசியல் சுனாமியில் அடித்துச் செல்லப்பட்ட கட்சிகள் தங்களைத் தற்காத்துக் கொள்ளத் தேடிக்கொண்ட தற்காலிகத் தப்பியோடல் வழியா என்ற பலத்த சந்தேகம் எழுகிறது.



இந்த ஊடக சந்திப்பின் போது, ஊடகவியலாளர்கள் எழுப்பிய எந்தவொரு தீர்க்கமான கேள்விக்கோ அல்லது சந்தேகங்களுக்கோ தலைவர்களால் முழுமையான பதில்களை வழங்க முடியவில்லை. ‘இதுவெறும் ஆரம்பக் கட்டம் தான், போகப் போகத் தான் எதையும் கூற முடியும்’ என்று மழுப்பலாகக் கூறிவிட்டு, அந்த சந்திப்பை அவசர அவசரமாக முடித்துக் கொள்வதிலேயே தலைவர்கள் குறி யாக இருந்தனர்.

தங்களின் எதிர்காலச் செயற்திட்டம் என்ன, எத்தகைய கொள்கைகளின் அடிப்படையில் நாம் ஒருங்கி ணைந்து நகரப் போகிறோம் என்பது பற்றிய எந்த வொரு தெளிவான வரைபடமும் இன்றி, வெறும் ஊடக வெளிச்சத்துக்காக மட்டுமே இவர்கள் கூடினார்களா என்ற கேள்விகள் தாராளமாக உள்ளன.

அதேநேரம், ஒருதரப்பினர் இதனை ஆளும்கட்சி யின் தூண்டுதலின் பேரில் உருவாக்கப்பட்ட ஒரு ‘கைப்பாவை அணி’ என்று சாடும் வேளையில், மறுதரப்பினர் இதனைத் தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராகக் களம் இறக்கப்பட்டுள்ள கூட்டு எதிர்க்கட்சியின் மற்றுமொரு முகமூடி என்று விமர்சிக்கின்றனர்.

ஆனால், யதார்த்தமான உண்மை என்னவென்றால், அண்மைய தேர்தல் மாற்றங்களால் தங்களின் பாரம்பரிய வாக்கு வங்கிகளை இழந்து, அரசியல் அரங்கில் அநாதரவாக்கப்படும் தோல்விப் பயத்தில் ஒன்றி ணைந்துள்ள சிறுபான்மைக் கட்சிகளின் ‘கூட்டு அவலமே’ இதுவாகும்.



தத்தமது கொள்கைகளுக்குப் பாதகம் வராமல், தமிழ்ப் பேசும் மக்களின் பொதுவான பிரச்சினைகளில் ஒருங்கிணைந்து செயற்படக் கூடிய சாத்தியமான விடயங்களில் மாத்திரம் இயங்குவது குறித்து இந்த இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டாலும், இந்த ஆறு கட்சிகள் மாத்திரம் தான் ஒட்டுமொத்த தமிழ்ப் பேசும் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் அல்ல என்ற கசப்பான உண்மையை அவர்கள் மறந்துவிட்டனர்.

இங்கு பிரதானமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயம், இந்த ஆறு கட்சிகளைத் தாண்டியும் தமிழ்ப் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய மாற்று அரசியல் சக்திகள் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகும். குறிப் பாக, கொள்கைப் பிடிப்புடன் இயங்குவதாகக் கூறும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்இந்த கூட்டில் இருந்து முற்றாக விடுபட்டிருக்கிறது.

‘பிற கட்சிகளும் வந்தால் வரவேற்போம்’ என்று ஊடக சந்திப்பின்போது எம்.ஏ. சுமந்திரன் சாதார ணமாகக் கூறிச்சென்றாலும், இந்த இணக்கப்பாட்டை உருவாக்கும் வகையில் அவரது கொழும்பு இல்லத்தில் முன்னெடுக்கப்பட்ட ஆரம்பக்கட்டப் பேச்சுவார்த்தைகளின் போது, அகில இலங்கை தமிழ் காங்கிரஸையோ அல்லது ஏனைய தமிழ்ப் பேசும் சிறு கட்சிகளையோ பொருட்டாக மதித்து, அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

இந்த முயற்சி கொள்கை ரீதியான இணக்கம் கொண்டது அல்ல என்பதை அவர்களே ஒத்துக்கொள்கிறார் கள். தமிழ் அரசுக் கட்சி தனது சமஷ்டி கோட்பாட்டை விட்டுக்கொடுக்கவில்லை, ஏனைய கட்சிகளும் தங்களின் அடிப்படைக் கொள்கைகளில் சமரசம் செய்யவில்லை.

உண்மையில், இந்த புதிய கூட்டு என்பது கொள்கை சார்ந்ததல்ல. மாறாக இதுவொரு வரையறுக்கப்பட்ட, குறுகிய கால சுயநலச் செயற்றிட்டங்களைக் கொண்ட ஒரு தற்காலிகத் தளமாகவே தென்படுகிறது.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல், நியாயமான அதிகாரப்பகிர்வுடன் கூடிய புதிய அரசியலமைப்பு மாற்றம் மற்றும் காணிப் பிரச்சினைகள் போன்ற அதிகார மையங்களை நோக்கிய விடயங்களை மட்டுமே தங்களின் பிரதான கோரிக்கைகளாக இவர்கள் முன்வைத்துள்ளனர்.

ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறைமையை முழுமையாகவும் தீவிரமாகவும் எதிர்க்கின்ற, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அடிநாதமாகக் கொண்ட தீவிரத் தரப்புகள் இதில் இணையவில்லை.

மாறாக, சமஷ்டியை வெளியில் வலியுறுத்தினாலும், உள்ளுக்குள் ‘கிடைப்பதை பெற்றுக் கொள்ளலாம், அதிகார சுகத்தை அனுபவிக்கலாம்’ என்ற மிதவாத, சந்தர்ப்பவாத மனோநிலையில் இருக்கின்ற தரப்புக்களே இதில் தஞ்ச மடைந்துள்ளன என்ற நோக்கு நிலையை புறந்தள்ள முடியாதுள்ளது.

கடந்த காலங்களில் கொழும்பின் ஆட்சியாளர் களைத் தீர்மானிப்பதில் பின் கதவால் நுழைந்து அமைச்சுப் பதவிகளையும், சலுகைகளையும் அள்ளிப் பருகியவர்கள் தான் மக்களின் காவலர்களைப் போல வேடமிட்டு குறித்த மேடையில் அமர்ந்திருக்கிறார்கள்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், இந்த பொதுத் தளத்தின் ஊடாகத் தங்களின் நீண்டகால தேசியப் பிரச்சினைகளுக்கு எந்தவொரு நீதியான தீர்வும் கிடைக்கப் போவதில்லை என்பது வரலாற்று உண்மை.

ஏனெனில், இக்கூட்டில் இணைந்துள்ள முஸ்லிம் மற்றும் மலையகக் கட்சிகள் தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் அபிலாஷைகளையோ அல்லது தமிழ்த்தேசிய நிலைப்பாடுகளையோ ஒருபோதும் ஏற்றுக்கொள்பவை அல்ல.



இன்னும் சொல்லப்போனால், கடந்த முப்பதாண்டு காலப் போரில் தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட கொடூரமான முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையைக் கூடப் பகிரங்கமாக ‘இனப்படுகொலை’ என்று ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற, அதற்கு சர்வதேச நீதியைப் பெற்றுத்தர ஒன்றி ணைந்து போராடத் தயாரில்லாத கட்சிகள் தான் இந்த மேடையில் கைகோர்த்து நிற்கின்றன.

அந்தப் பேரவலங்கள் நடந்த காலகட்டத்தில், முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் அங்கம் வகித்து, ஆளும் கட்சியின் போர்க் குற்றங்களுக்குத் துணையாக இருந்து, அவர்களின் அடக்குமுறைகளைப் போற்றித் துதித்துப் பதவிகளைக் காப்பாற்றிக் கொண்டவர்கள் என்பதை மறந்து விடமுடியாது.


அப்படியானால், கொள்கை முரண்பாடுகளும் கறைபடிந்த வரலாறும் கொண்ட இந்த ஆறு கட்சிகளும் ஏன் ஒன்றிணைய வேண்டும்? இதற்கான விடை மக்களின் துயரங்களில் இல்லை, மாறாக இவர்களின் சொந்த அரசியல் வீழ்ச்சியில் தான் உள்ளது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் இந்த ஆறு

தொடர்ச்சி: பக்கம் 15




1983, யூலை, 23, ல் தமிழீழ விடுதலைப் புலிகளால் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் வீதியில் படை நகர்வுக்காக சென்ற இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் இந்த தாக்குதலை தூண்டுதலாக எடுத்து திட்டமிட்ட இனப்படுகொலையை அப்போதைய ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசிய கட்சி அரசின் ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்தன, பிரதமர் ஆர் பிரமதாசா, அமைச்சர் சிறில் மத்தியூ மற்றும் கட்சி உறுப்பினர்களால் திட்டமிடப்பட்ட கூட்டு இனப்படுகொலை இதுவாகும். இதனை கறுப்பு யூலை என பின்னர் அடையாளப் படுத்தப்பட்டது. 2026, யூலை,23, இன்று 43, வருடங்கள் அந்த கொடுரம் நடந்து இன்று வரையும் அதற்கான நீதியில்லை.



“இந்த படுகொலை கொடுரத்தை முதன் முதலாக ஒரு சர்வதேச அமைப்பான பன்னாட்டு நீதித்துறை வல்லு நர்கள் ஆணையம் (International Commission of Jurists) என்ற அரசசார்பற்ற அமைப்பு 1983 டிசம்பரில் வெளியிட்ட அறிக்கையில் யூலை படுகொலை இப்படுகொலை என்று விவரித்தது”

எப்படி இந்த இனப்படுகொலை 1983,யூலை,23, தொடக் zகம் 1983, யூலை,30, வரையும் தொடர்சியாக 8, நாட்கள் அரங்கேறியது என்பதை விரிவாக பார்போம்.



## 1ஆம் நாள்

1983 யூலை 23,சனிக்கிழமை இரவு 11.30 மணியளவில், தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ் நகருக்கு அருகில் உள்ள திருநெல்வேலியில் காவல் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத் தொடரணி மீது பதுங்கியிருந்து தாக்குதலை தொடுத்தனர். இதன்போது இரண்டு இராணுவத்தினர் காயமடைந்தனர். அதன் பின்னால் வந்த வாகனத்தில் இருந்த இராணுவத்தினர் தங்கள் சக வீரர்களுக்கு உதவக் கீழே இறங்கினர். அவர்கள் மீது போராளிகள் தானியங்கி ஆயுதங்கள், கைக்குண்டுகள் கொண்டு தாக்குதல் நடத்தி னர். தொடர்ந்து நடந்த மோதலில், ஒரு அதிகாரியும் பன்னிர ண்டு இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.

## 2ஆம் நாள்

1983, யூலை.24 , ஞாயிற்றுக்கிழமை அதிகாலை யாழ் பலாலி இராணுவ முகாமில் இருந்து புறப்பட்ட இராணுவத்தினர் யாழ்ப்பாணம் திருநெல்வேலி செல்லும் பாதையில் உள்ள அனைத்துக் கடைகளையும் அடித்து நொறுக்கியதுடன 51 தமிழ் பொதுமக்கள் இராணுவத்தால் படுகொலை செய்யப் பட்டனர்.



13 இராணுவத்தினரின் இறுதிச் சடங்குகளை யாழ்ப்பாணத்தில் நடத்தக் கூடாது என இராணுவத்தின் தளபதி திச்ச வீரதுங்க உட்பட்ட இராணுவ அதிகாரிகள் முடி வெடுத்தனர். அதற்குப் பதிலாக கொழும்பில் பொரளை கனத்தை சேமக்காலையில் முழு இராணுவ மரியாதையுடன் இறுதிச் சடங்குகளை நடத்த முடிவு செய்யப்பட்டது.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தன, பிரதமர் ரணசிங்க பிரேமதாசா, 1983, யூலை 24 மாலை 5 மணிக்கு நடைபெறவிருந்த இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள சென்றனர். இறந்த இராணுவத்தினரை அவர்களது சொந்தக் கிராமங்களில் அடக்கம் செய்வதற்காக அவர்க ளது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கும் வழக்கமான நடை முறைக்கு மாறாகவே இது நடந்தது.

பொரளையில் உள்ள காவல் நிலையத்தில் கலகத் தடுப்புப் பிரிவினர் தயார் நிலையில் வைக்கப்பட்டு இறுதிச் சடங்கிற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் மாலை 5 மணியாகியும் உடல்கள் கொழும்புக்கு வரவில்லை. இராணுவ வீரர்களின் உடல்களை தங்களிடம் ஒப்படைத்து, பாரம்பரிய முறைப்படி அடக்கம் செய்ய வேண்டும் என இராணுவ வீரர்கள் வலியுறுத்தினர்.

நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக, சடலங்கள் பலாலி இராணுவ முகாமில் தொடர்ந்து இருந்தன. பலாலி விமானப்படை தளத்தில் இருந்து உடல்களை ஏற்றி வந்த அவ்ரோ விபானப்படை விமானம் இரவு 7.20 மணிக்கு இரத்மலானை வானூர்தி நிலையத்தை வந்தடைந்தது, சடலங்கள் கனத்தை மயானம் கொண்டு செல்ல தாமத மானதன் காரணமாக கனத்தை சேமக்காலையில் பதற்றம் அதிகரித்தது. கொழும்பு வனாத்தமுல்லை சேரியைச் சேர்ந்த சுமார் 3000, தொடக்கம் 8000, பேர் உட்பட ஒரு பெரிய

பா.அரியநேத்திரன்

கூட்டம், தாக்குதல் செய்தியால் கோபமடைந்த நிலையில் கனத்தையில் திரண்டனர்.

உடல்களை மயானத்தில் அடக்கம் செய்வதை விட குடும்பத்தாரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று ஒரு கூட்டத்தினர் சத்தமிட்டு கோசமிட்டனர். கூட்டத்திற்கும் காவல்துறையினருக்கும் இடையே வன்முறை வெடித்தது, கலவரப் படை வரவழைக்கப்பட்டது. கலகத் தடுப்புப் பிரிவினர் கூட்டத்தின் மீது கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசி, தடியடி நடத்தினர். நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவர இராணுவம் வரவழைக்கப்பட்டது.

இறுதியில் இராணுவ இறுதிச் சடங்கு நிறுத்தப்பட்டு உடல்களைக் குடும்பத்தினரிடம் ஒப்படைக்க ஜே ஆர் முடிவு செய்தார். இரத்மலானையிலிருந்து உடல்களை ஏற்றிச் சென்ற வாகனங்கள் இராணுவத் தலைமையகத்திற்கு திருப்பி விடப்பட்டன. கனத்தையில் குழுமி இருந்த கூட்டத்திற்கு இரவு 10 மணியளவில் ஜனாதிபதி ஜே ஆரின் முடிவு தெரிவிக்கப்பட்டது. பின்னர் திரண்ட மக்கள் சேமக் காலையை விட்டு வெளியேறியனர்.

வெளியேறிய கூட்டத்தின் ஒரு பகுதி சிங்ககள குண்டர்கள் டி. எஸ். சேனநாயக்கா வீதியில் இருந்து பொரளை வீதிவரை உள்ள தமிழருக்குச் சொந்தமான நாகலிங்கம் ஸ்டோர் என்ற கடையை தீயிட்டு அழித்து தமிழர் களுடைய வீடுகளையும் உடைத்தனர். இவ்வேளையில் 10,000 இற்கும் அதிகமானோர் இக்கும்பலில் சேர்ந்தனர்.



அவர்கள் பொரளையில் உள்ள கடைகளைக் கொள்ளையடித்தனர், பொரளை சந்திக்கு அருகில் உள்ள பொரளை அடுக்குமாடி குடியிருப்புகள், தமிழ் யூனி யன் துடுப்பாட்டக் கழகம் உட்பட தமிழ்த் தொடர்பைக் கொண்டிருந்த அனைத்துக் கட்டடங்களையும் தாக்கிக் கொள்ளையடித்துத் தீ வைத்தனர். அப்போது அக்கம் பக்கத்தில் உள்ள தமிழர்களின் வீடுகள் குறிவைக்கப்பட்டன. பின்னர் தெமட்டகொடை, மருதானை, நாரகேன்பிட்டி, பாலத் துறை, திம்பிரிகசாய ஆகிய திசைகளில் கூட்டம் கலைந்து, அங்கு தமிழர்களின் சொத்துக்களை தாக்கி சூறையாடி தீ வைத்தனர்

## 3ஆம் நாள்,

1983, யூலை,25, திங்கள்கிழமை காலை 9.30 மணிக்கு ஜே ஆர் ஜெயவர்தனா நாட்டின் பாதுகாப்புப் பேரவையை மாலையில் கூட்டினார். பாதுகாப்பு பேரவை கூட்டம் நடக்கும் அதே நேரத்தில் அம்மாளிகையில் இருந்து 100 யார் தொலைவில் இருந்த ‘அம்பாள் கபே’ தீ மூட்டப்பட்டு எரிந்து கொண்டிருந்தது. அருகில் யோர்க் வீதியில் ‘சாரதாஸ்’

தொடர்ச்சி: பக்கம் 06

## ஒரு சர்வதேச ... தொடர்ச்சி...

நிறுவனமும் தீக்கிரையானது. தொடர்ந்து ஜனாதிபதி மாளிகைக்கு முன்னால் இருந்த பெய்லி வீதியில் அனைத்துத் தமிழ்க் கடைகளுக்கும் தீ மூட்டப்பட்டன. பாதுகாப்புப் பேரவையின் கூட்டம் முடிவடைவதற்கிடையில், கொழும்பு கோட்டைப் பகுதியில் இருந்த அனைத்துத் தமிழ் நிறுவனங்களும் தீக்கிரையாகின.

அன்று மாலை 6 மணி முதல் கொழும்பில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. சிங்களகாடைக்கும்பல் ஒல்கொட் மாவத்தை வழியே சென்று கோட்டை தொடருந்து நிலையத்திற்கு முன்னால் இருந்த 'ஆனந்த பவன்', 'இராஜேசுவரி ஸ்டோர்', 'அஜந்தா ஓட்டல்' ஆகியவற்றிற்கும் தீ வைத்தனர்.

அமைச்சர்களான சிறீல் மத்தியூ உட்பட பலர் அன்று காலை கொழும்பின் பல்வேறு இடங்களில் தமிழர் குடியிருப்புகளைத் தாக்குமாறு கும்பல்களை வழி நடத்திக் கொண்டிருந்தனர். ரணசிங்க பிரேமதாசாவின் நம்பிக்கைக்குரிய அடியாளான சிறில் மத்தியூ, கோட்டை, புறக்கோட்டை பகுதிகளிலும், கொழும்பு நகர முதல்வரின் அடியாட்கள், மாநகரசபைப் பணியாளர்கள், போக்குவரத்து அமைச்சர் எம். எச். முகம்மதின் ஆட்கள் பொரளையிலும், மாவட்ட அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சியின் அடியாட்கள் கொழும்பு வடக்கிலும், துணை அமைச்சர் அனுர பஸ்தியானின் ஆட்கள் கொழும்பு தெற்கிலும் தமிழ்ர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

இன்னுமொரு கும்பல் பாலத்துறை, கிருலப்பனை, கொட்டாஞ்சேனை,மருதானை,முகத்துவாரம்,நாரகேன்பிட்டி, கொம்பனித் தெரு, வனாத்தமுல்லை உட்பட பெரும்பாலான பகுதிகளில் தாக்குதல்கள் இடம்பெற்றிருந்தன. கம்பிகள், சமையலறைக் கத்திகளுடன் ஆயுதம் ஏந்திய கும்பல் தெருக்களில் சுற்றித் திரிந்து, தமிழர்களைத் தாக்கிக் கொன்றது. அடுத்ததாக, யாழ்ப்பாணத் தமிழ்ர் பெருமளவு வசிக்கும் வெள்ளவத்தை, தெகிவளை போன்ற பகுதிகளில் வன்முறை பரவியது. பெருமளவு வீடுகளும், கடைகளும் தாக்கப்பட்டு எரிக்கப்பட்டன. கொழும்பு பிரதான வீதி, ஐந்துலாம்படிச் சந்தியில் உள்ள கடைகளும் தாக்கப்பட்டன. அன்டர்சன் தொடர் குடியிருப்பு, எல்விட்டிகல, டொரிங்டன் திம்பிரிகசாய தொடர் குடியிருப்புகளில் இருந்த தமிழ் வீடுகள் தாக்கப்பட்டுக் கொள்ளையடிக்கப்பட்டன. மிகவும் பாதுகாப்பானதெனக் கருதப்பட்ட கறுவாத்தோட்டத்தில் இருந்த தமிழ்ர் வீடுகளும் தாக்கப்பட்டன.

கடவத்தை, களனி, நுகேகொடை, இரத்மலானை போன்ற புறநகர்களிலும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்தியத் தூதரின் வீடும் தாக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டது.ஏறக்குறைய நகரின் அனைத்துப் பகுதிகளும் தீயில் மூழ்கின. அன்று மாலை 6.00 மணிக்கு அமுலாகவிருந்த ஊரடங்கு மறுநாள் பிற்பகல் 2.00 மணிக்கு கொண்டுவரப்பட்டது. நீர்கொழும்பிலும் தமிழர் பகுதிகள் தாக்கப்பட்டதை அடுத்து, கம்பகா மாவட்டத்திலும் ஊரடங்கு கொண்டுவரப்பட்டது. களுத்துறையில் டி.கே.வி.எஸ் என்ற வணிக நிறுவனம் தீக்கிரையாக்கப்பட்டது. அதன் உரிமையாளரான தமிழர் மாடியில் இருந்து குதித்துத் தப்ப முயன்றார், ஆனால் வன்முறைக் கும்பல் அவரை மீண்டும் தீப்பற்றிய கடைக்குள் எறிந்து அவரைக் கொன்றனர்.ஊரடங்கு சட்டம் களுத்துறை மாவட்டத்திற்கும் நீடிக்கப்பட்டது. காவல்துறை ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாமலோ அல்லது விரும்பாததாலோ, காவல்துறைக்கு உதவ இராணுவம் வரவழைக்கப்பட்டது.

கலவரக்காரர்கள் தமிழர்களைக் குறிவைக்க வாக்காளர் பதிவுப் பட்டியலைப் பயன்படுத்தத் தொடங்கினர். தமிழர்களின் வீடுகள் மற்றும் சொத்துக்களை அடையாளம் காணும் கும்பல்களிடம் தேர்தல் பட்டியல்கள் கைவசம் இருந்தமை, அரசாங்கத்தின் முக்கிய அதிகாரிகளின் ஒத்துழைப்பைக் குறிக்கிறது. சனாதிபதி ஜெயவர்தன பின்னர் ஒரு அறிக்கையில் ஒப்புக்கொண்டது போல், "நடந்த கலவரங்கள், கொள்ளைகளில் ஒரு அமைப்பி னால் திட்டமிட்ட முறையில் கவனிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது."சொய்சா குடியிருப்பில் உள்ள தமிழர்களுக்குச் சொந்தமான 92 குடியிருப்புகளில் 81 குடியிருப்புகள் தாக்கப்பட்டு, கொள்ளையடிக்கப்பட்டு தீ வைக்கப்பட்டன. தமிழர்களுக்குச் சொந்தமான பல தொழிற்சாலைகளைக் கொண்ட இரத்மலானை கைத்தொழில் பகுதி மீது இந்தக் கும்பல் தாக்குதல் நடத்தியது. காலி வீதியில் இருந்த ஜெட்ரோ கார்மென்ட்சு, டாட்டா கார்மென்ட்சு முற்றிலும் எரிந்து நாசமானது. பாண்ட்ஸ், எஸ்-லான், ரீவ்ஸ் கார்மெென்ட்சு, ஹைடோ கார்மென்ட்சு, ஹைலக் கார்மென்ட்சு, ஏ ஜி எம் கார்மென்ட்சு, மன்ஹாட்டன் கார்மென்ட்சு, புளோய் பெக், பெரெக், மாஸ்கான்ஸ் ஆசுபெசுட்டசு ஆகியவை தாக்கியழிக்கப்பட்ட ஏனைய தொழிற்சாலைகள் ஆகும். குண்டன்மால்ஸ், ஆக்ஸ்போர்டு மற்றும் பேக்சன் கார்மென்ட்சு போன்ற இந்தியருக்குச் சொந்தமான தொழிற்சாலைகள் தாக்கப்படவில்லை, இது வேண்டுமென்றே இலங்கைத் தமிழர் இலக்குகளையே வன்முறைக் கும்பல் பின்தொடர்ந்தது என்ற கருத்துக்கு நம்பகத்தன்மையை அளிக்கிறது.

இரத்மலானையில் 17 தொழிற்சாலைகள் அழிக்கப்பட்டன. தமிழருக்குச் சொந்தமான கேப்பிடல் மகாராஜா இலங்கையின் மிகப்பெரிய கூட்டு நிறுவனங்க ளில் ஒன்றாகும். இரத்மலானாவில் உள்ள அவர்களது ஆறு தொழிற்சாலைகளும், பேங்சால் தெருவில் உள்ள அவர்களின் தலைமையகமும் அழிக்கப்பட்டன. வன்முறைக் கும்பலால் கல்கிசையில் உள்ள டில்லிஸ் பீச் ஹோட்டலுக்கு தீவைக்கப்பட்டது.

### வெலிக்கடை சிறைச்சாலைப் படுகொலைகள்

1983,யூலை,25,திங்கட்கிழமை கொழும்பு நகரில் தாக்குதல் நடத்தும் சம நேரத்தில் நடந்த மிக மோசமான இனப்படுகொலை கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த குட்டிமணி, ஜெகன் உட்பட 37 தமிழ் அரசியல் கைதிகள், சிங்களக் கைதிகளால் கத்திகள் மற்றும் இரும்புக்கம்பி, தடிகளால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

சிங்கள சிறை அதிகாரிகள் தமிழ் அரசியல் கைதிகள் இருந்த அறைகளின் சாவிகளை சிங்களக் கைதிகளுக்கு வழங்கினர் . இதனை உயிர் பிழைத்தவர்கள் கூறினர். ஆனால் சிறை அதிகாரிகள் அவர்களிடம் இருந்து சாவிகள் திருடப்பட்டதாககூறினர்.

### 4ஆம் நாள்

1983,யூலை,26,செவ்வாய்கிழமை வெள்ளவத்தை,தெகிவளையில் சிங்கள காடைக்கும்பல் தாக்குதல்கள் தொடர்ந்தன. தெகிவளை இரத்னாகர வீதியில் இருந்த 53 வீடுகளில், தமிழர்கள் வசித்து வந்த 24 வீடுகள் எரிக்கப்பட்டன.தமிழர் வாடகைக்குக் குடியிருந்த சிங்களவருக்கு சொந்தமான மூன்று வீடுகளை எரிக்காமல் உடமைகளை மட்டும் வெளியே அகற்றி அவற்றை எரித்தனர். நகரின் பல பகுதிகளில், இராணுவத்தினரும் காவல்துறையினரும் சொத்துக்கள் அழிக்கப்பட்டதையும், மக்கள் கொல்லப்பட்டதையும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அன்று யூலை 26, நாட்டின் இரண்டாவது பெரிய நகரமான கண்டிக்கும் வன்முறை பரவியது. பிற்பகல் 2.45 மணியளவில் பேராதனை வீதியிலுள்ள டெல்ட்டா மருந்தகம் தீப்பற்றி எரிந்தது. அதன் பின்னர், லக்சலா கட்டிடத்திற்கு அருகாமையில் உள்ள தமிழருக்குச் சொந்தமான கடை ஒன்றுக்கு தீ வைக்கப்பட்டது, மேலும் வன்முறை காசில் தெரு, கொழும்பு தெரு வரை பரவியது. பின்னர் காவல்துறையினரால் நிலைமையைக் கட்டுப்படுத்த முடிந்தது, ஆனால் ஒரு மணி நேரத்திற்குப் பிறகு எரிபொருட்களுடன் ஆயுதம் ஏந்திய ஒரு கும்பல் கண்டி, கோட்டை, கொழும்பு, கிங்ஸ், திருகோணமலை வீதிகளில் உள்ள தமிழ்க் கடைகளைத் தாக்கத் தொடங்கியது. பின்னர் அந்த கும்பல் அருகில் உள்ள கம்பளைக்கு சென்றது.1983,யூலை 26 மாலையே கண்டி மாவட்டத்தில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதாகவும்,காரைநகர் கடற்படைத்தளம் அழிக்கப்பட்டதாகவும், நாக விகாரை தேதப்படுத்தப்பட்டதாகவும் பொய்யான வதந்திகள் திருகோணமலையில் பரவ ஆரம்பித்தன. திருகோணமலை கடற்படைத் தளத்தை தளமாகக் கொண்ட கடற்படையினர் மத்திய வீதி, கப்பல்துறை வீதி, பிரதான வீதி மற்றும் வடக்கு கடற்கரைச் சாலையைத் தாக்கி வெறித்தனமாகச் சென்றனர். அவர்கள் தங்கள் தளத்திற்குத் திரும்புவதற்கு முன் 170 தமிழர்களுடைய வீடுகள்,கட்டடங்களுக்கு தீ மூட்டினர். திருஞானசம்பந்தன் வீதியிலுள்ள சிவன் ஆலயமும் தாக்கப்பட்டது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நாடு முழுவதும் 1983,யூலை,26,ல் ஊரடங்கு நீட்டிக்கப்பட்டது. பல்வேறு இனக்குழுக்கள் இணைந்து வாழ்ந்த பகுதிகளில் தமிழர்களுக்கு எதிரான வன்முறை மற்றும் கொள்ளைகள் அதிகமாக இடம்பெற்றன. திருநெல்வேலித் தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் உடல்கள் 1983, யூலை, 26, இரவு ஊரடங்கு உத்தரவின் போது
அடக்கம் செய்யப்பட்டன.

### 5ஆம், நாள்

1983, யூலை,27,புதன்கிழமை இரண்டாம் தடவையாக வெலிக்கடை சிறையில் டாக்டர் இராஜசுந்தரம் உட்பட 18, பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

மத்திய மாகாணத்தில், நாவலப்பிட்டி, அட்டன்வரை வன்முறை பரவியது. அதற்கு அண்டைய ஊவா மாகாணத்தின் மிகப்பெரிய நகரமான பதுளையில் அன்று காலை 10.30 மணியளவில் மணிக்கூட்டு கோபுரத்தின் முன் தமிழர்களுக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிள் தீவைக்கப்பட்டது.நண்பகலில் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட கும்பல்நகரின்வணிகப்பகுதிவழியாகசென்றுகடைகளுக்கு தீ வைத்தது. கலவரம் பின்னர் குடியிருப்புப் பகுதிகளுக்கும் பரவியது, மேலும் பல தமிழர்களின் வீடுகள் எரிக்கப்பட்டன. பின்னர் அந்தக் கும்பல் தாங்கள் திருடிய வாகனங்களிலும் பேருந்துகளிலும் நகரை விட்டு பண்டாரவளை, ஆலி-எல, வெலிமடை ஆகிய இடங்களுக்குச் சென்று, அங்கு தொடர்ந்து சொத்துக்களுக்கு தீ வைத்து எரித்தது. கலவரம் இரவு நேரத்தில் லுணுகலை வரை பரவியது.

### 6ஆம் நாள்

1983, யூலை,28 , வியாழக்கிழமை பதுளை தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது, மேலும் கலவரம் லுணுகலையில் இருந்து பசறை வரை பரவியது. நுவரெலியா மற்றும் சிலாபத்திலும் கலவரம் ஏற்பட்டது.ஆனால் கொழும்பு, கண்டி மற்றும் திருகோணமலையில் வன்முறைகள் குறைந்தன.

ஜே ஆர் ஜெயவர்த்தனவும் அவரது அமைச்சரவையும் அன்று அவசர கூட்டத்தை நடத்தி ஜெயவர்தன ரூபவாஹினி தொலைக்காட்சியில் மக்களுக்கு உரையாற்றினார், அதில் அவர் வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு வேண்டுகோள் விடுத்து விட்டு அதே நேரம் அவர் கூறியது "1976 ஆம் ஆண்டு, தமிழர் விடுதலைக் கூட்டணி, மிகப் பெரிய அரசியல் கட்சியாக இருந்த போது, சுதந்திர தமிழ் அரசுக்காக விடுத்த அழைப்புகளால், "சிங்களவர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே வளர்ந்த ஆழமான மோசமான உணர்வும் சந்தேகமும்" வன்முறைக்கு காரணம் என்றும் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றியது. சிங்கள மக்கள் எதிர்வினையாற்றிய விதம் தமிழ்ப் போராளிகள் செய்த வன்முறைக்கே என்றும் அவர் நியாயம் கற்பிக்கும் விதமாக குற்றம் சாட்டினார்.2,500 ஆண்டுகளாக ஒரே தேசமாக இருந்த ஒரு நாட்டைப் பிரிப்பதற்கு சிங்கள மக்கள் ஒருபோதும் உடன்பட மாட்டார்கள் என்று சபதம் செய்த ஜெயவர்தனா, அரசாங்கம் "சிங்கள மக்களின் கூக்குரலுக்கு இணங்கும்" மற்றும் தேசத்தைப் பிளவுபடுத்த முயலும் எந்தக் கட்சியும் தடை செய்யப்படும் என்றும் அறிவித்தார்"

### 1983, யூலை,28 வியாழக்கிழமை

இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி ஜெயவர்தனாவிடம் யூலை கலவரம் இந்தியாவில் ஏற்படுத்திய தாக்கத்தை அவருக்குத் தெரிவித்தார். வெளிவிவகார அமைச்சர் பி. வி. நரசிம்மராவைத் தனது சிறப்புத் தூதராக ஜெயவர்தனே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். ஜெயவர்தனே அதனை ஏற்றுக்கொண்ட சில மணி நேரங்களுக்குப் பிறகு ராவ் இலங்கைக்கு வந்தார்.

### 7ஆம் நாள்

1983, யூலை,29 வெள்ளிக்கிழமை கொழும்பு அமைதியாக இருந்தது. நகரத்தில் உள்ள பல அகதிகள் முகாம்களில் தஞ்சமடைந்த நண்பர்கள் மற்றும் உறவினர்களை தமிழ் மக்கள் பார்வையிட்டனர். காலை 10.30 மணியளவில் காஸ் வர்க்சு வீதியில் இரண்டு சிங்கள இளைஞர்கள் சுடப்பட்டனர்.அடம் அலி கட்டடத்தில் இந்த இளைஞர்கள் தமிழ் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதாக வதந்திகள் பரவ ஆரம்பித்தன. கட்டடம் இராணுவம், கடற்படை மற்றும் காவல்துறையினரால் சூழப்பட்டது, அவர்கள் கட்டிடத்தின் மீது துணை இயந்திரத் துப்பாக்கிகளினால் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.ஒரு உலங்குவானூர்தியும் கட்டிடத்தின் மீது சுட்டது. பாதுகாப்புப் படையினர் கட்டிடத்திற்குள் நுழைந்த போது உள்ளே தமிழ் புலிகள், ஆயுதங்கள் அல்லது வெடிமருந்துகள் எதுவும் கிடைக்கவில்லை. எனினும், இராணுவம் தமிழ் புலிகளுடன் போரில் ஈடுபட்டதாக கொழும்பில் வதந்திகள் பரவ ஆரம்பித்தன. புலிகளை எதிர்த்துப் போரிடத் தயாராக கோடரிகள், செங்கல்கள், இரும்புக் கம்பிகள், கத்திகள் மற்றும் கற்கள் போன்ற ஆயுதங்களுடன் தெருக்களில் கும்பல்களாக சிங்கள் மக்கள் கூடத் தொடங்கினர். வாகனங்களை நிறுத்தித் தமிழர்களைத் தேடினர். அவர்கள் கண்டறிந்த தமிழர்கள் தாக்கப்பட்டு தீவைக்கப்பட்டனர். கிருள வீதியில் ஒரு தமிழர் உயிருடன் எரிக்கப்பட்டார். அத்திடிய வீதியில் பதினொரு தமிழர்கள் உயிருடன் எரிக்கப்பட்டனர். இரண்டு தமிழர்களினதும், மூன்று முசுலிம்களினதும் சடலங்கள் இருந்த ஒரு வாகனத்தை அதே வீதியில் காவல்துறையினரால் 15 கலவரக்காரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். யூலை 29 பிற்பகல் 2 மணிக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு ஆகத்து 1 திங்கள் காலை 5 மணிக்கு நீக்கப்பட்டது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் நரசிம்ம ராவ் உலங்குவானூர்தியில் கண்டிக்கு செல்வதற்கு முன்னர் அரசுத்தலைவர் ஜனாதிபதி ஜெயவர்தன, வெளிவிவகார அமைச்சர் ஏ. சீ. எஸ். அமீது ஆகியோருடன் கலந்துரையாடினார்.

### 8ஆம் நாள்

1983, யூலை,30, சனிக்கிழமை நுவரெலியா, கந்தப்பளை, காவஎலிய, மாத்தளை ஆகிய இடங்களில் வன்முறைகள் இடம்பெற்றன. நாட்டின் ஏனைய பகுதிகளில் அமைதி நிலவியது. வன்முறைகளைத் தூண்டியமைக்காக அதே நாள் இரவில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, நவ சமசமாஜக் கட்சி ஆகிய மூன்று இடதுசாரிக் கட்சிகளுக்கு அரசு தடை வித்தது. ஏனைய குழுக்களைச் சேர்ந்த சில தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

வாக்காளர் இடாப்புக்களை கையில் வைத்திருந்த வன்முறையாளர்கள், தமிழர்களின் வீடுகளையும் வணிக நிலையங்களையும் தேடித்தேடித் தாக்கினர்.

ஏழு நாட்களில், 1983, யூலை,24, தொடக்கம் யூலை 30, வரையும் நடந்த இனப்படுகொலையால் மூவாயிரம் (3,000) தமிழர்கள் உயிரிழந்தனர் என மதிப்பிடப்பட்டது, வீடுகளையும், உடமைகளையும் இழந்து ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் (150,000) பேர் வீடற்றவர்களாயினர். ஏறத்தாழ எண்ணாயிரம் (8,000) வணிக நிறுவனங்களும் அழிக்கப்பட்டன. இக்கலவரத்தின் போது ஏற்பட்ட மொத்தப் பொருளாதாரச் செலவு முன்னூறு (300) மில்லியன் என

தொடர்ச்சி: பக்கம் 14




ஈழத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள கேப்பாபுலவு என்பது சாதாரணமாக ஒரு கிராமத்தின் பெயர் இல்லை. தமிழர் தாயகத்தில் நில உரிமைக்காக முன்னெடுக்கப்படும் மிக நீண்டகால மக்கள் போராட்டத்தின் அடையாளமாகவும் சின்னமாகவும் இருக்கிறது கேப்பாபுலவு. முள்ளிவாய்க்கால் போர் முடிந்து பதினேழு ஆண்டுகள் கடந்தும், மக்கள் தமது சொந்த நிலங்களுக்குள் நுழைய முடியாமல் இராணுவ முகாம்களின் வேலிகளுக்கு வெளியே நின்று தங்கள் நிலத்தின் விடுதலைக்காக கேப்பாபுலவு மக்கள் போராடுகின்றனர். இம் மக்களின் தொடர்போராட்டம் ஆரம்பித்துத் தான் பத்தாண்டுகள். ஆனால் அதையும் விட நெடியது நிலத்திற்கான இம் மக்களின் போராட்டம்.




## நிலத்தை மறக்கலாமா?

போருக்குப் பின்னர், வன்னி மாவட்ட முன்னாள் படைத் தளபதியான மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா, நாட்டின் அபிவிருத்திக்காக மக்கள் தமது நிலங்களைத் தியாகம் செய்ய வேண்டும் என்றும் கேப்பாபுலவு மக்கள் தமது சொந்த இடங்களை மறந்துவிட வேண்டும் என்றும் கூறியிருந்தார். அந்தக் கருத்து மக்களின் மனங்களில் பெரிய தாக்கத்தை உண்டுபண்ணியது. அவர்கள் தளர்த்துவிடவில்லை. மாறாக, நிலத்தை மீட்கும் உறுதியை மேலும் வலுப்படுத்திக் கொண்டனர். அரசியல் அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள், பேச்சுவார்த்தைகள் என பல தடைகளைச் சந்தித்தபோதும், தங்கள் நிலத்தை மீட்கும் போராட்டத்தில் ஒற்றுமையுடனும் நுட்பங்களுடனும் மக்கள் போராடினர்.



2017 ஆம் ஆண்டு பிலக்குடியிருப்பு விமானப்படை முகாமின் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட தொடர் போராட்டம் கேப்பாபுலவு மக்களின் உறுதியை உலகிற்கு எடுத்துக்காட்டியது. பெண்கள், முதியவர்கள், குழந்தைகள் என குடும்பம் குடும்பமாக தகரக் கொட்டில்களில் தங்கி, வெய்யிலையும் மழையையும் பொருட்படுத்தாமல் போராடிய காட்சி இணையத்தளங்களிலும் பத்திரிகைகளிலும் வெளி யாகி உலக மக்களின் மனசாட்சியை தொட்டது. அப் போராட்டம் ஸ்ரீலங்கா அரசுக்கு பாரிய அழுத்தத்தை உண்டு பண்ணியது. அந்தத் தொடர்ச்சியான மக்கள் எழுச்சியின் விளைவாக சுமார் எண்பது ஏக்கர் நிலம் மக்களிடம் மீள ஒப்படைக்கப்பட்டது. அம் மக்களைப் பொறுத்த வரையில் அது ஒரு தற்காலிக வெற்றிதான். அது சிறிய நகர்வுதான். முழுமையான நீதி இன்னும் கிடைக்கவில்லை. அதனால் அவர்களின் போராட்டமும் தொடரத்தான் செய்தது.

## மீண்டும் மீண்டும் போராட்டம்

கேப்பாபுலவு மக்களின் கோரிக்கை என்பது எங்கள் நிலம் எமக்கு வேண்டும் என்பது மாத்திரமே. மாற்றுக் காணிகளை நாம் பெற மாட்டோம் என்றும் காணிகளுக்கு நஷ்டஈடு வேண்டாம் என்றும் அவர்கள் மாறி மாறி வந்த அரசுக்கு அளித்த பலமான பதில். எமது மூதாதையர்கள் வாழ்ந்த பூர்வீக நிலங்களையே திருப்பித் தர வேண்டும் என்பதே அவர்களின் பெருங்குரல். தம் நிலங்களில் உழுது, தொழில் செய்து வாழ்ந்து வழிபட்டு தம் உதிரத்தை தம் நிலங்கள் வேண்டும் என்பதுதான் கேப்பாபுலவு மக்களின் ஒற்றைக்குரல். அங்கே தங்களின் மூதாதையர்களின் வரலாற்றையும் நினைவுகளையும் அவர்கள் கொண்டிருக் கிறார்கள். எனவே, அந்த மண்ணிற்கு மாற்றாக வேறு எதையும் ஏற்க முடியாது என்ற உறுதியில் அம் மக்கள் இருக்கின்றனர்.




2017இல் மீண்டும் இராணுவ முகாம் முன்பு தொடங்கிய போராட்டம், ஒரு கட்டத்தில் சில பகுதிகளையும் வீதி ஒன்றையும் விடுவிக்கத் துணைபுரிந்தது. இந்த நிலையில் மீண்டும் தங்கள் நிலங்களை விடுவிக்கும் வகையில் போராட்டம் புதிய கட்டத்தை எட்டியுள்ளது. கடந்த ஜூன் 5 ஆம் தேதி கேப்பாபுலவு மக்கள் மீண்டும் இராணுவ முகாமின் முன்பாக ஒன்றுகூடி நிலங்களை உடனடியாக விடுவிக்கக் கோரி தொடர் போராட்டத்தை ஆரம்பித்தனர். அத்துடன் அவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்திலும் ஈடுபட்டு வருகின்றனர். பெண்களும் முதியவர்களும் அதிகளவில் பங்கேற்ற இந்தப் போராட்டம், நிலமின்றி வாழும் வாழ்க்கையின் துயரத்தை மீண்டும் உலகின் கவனத்திற்குக் கொண்டு வந்தது.

## குழந்தைகள் போராடும் நிலம்

கேப்பாபுலவில் குழந்தைகள் போராடுகின்ற காட்சி 10 ஆண்டுகளுக்கு முன்பே ஊடகங்களில் உருக்கமாக வெளி யாகின. இன்றும் குழந்தைகள் போராடுகின்றனர். அவர்கள் தம் நிலத்தை இன்னமும் காணாத தலைமுறையினர்.

**தீபச்செல்வன்**

உண்மையில் இந்த மக்கள் கடந்த பத்தாண்டுகளாகப் போராடவில்லை. 17 ஆண்டுகளாகப் போராடுகின்றனர். தம் தாய்நிலத்தைக் காணாமலே, தம் பூர்வீக நிலத்தைக் காணாமலே போராடுகின்ற குழந்தைகள்தான் நம் காலத்தின் தலைமுறைகள். நில ஆக்கிரமிப்பு தலைமுறைகளை உலுக்குவதைத்தான் இப் போராட்டம் நமக்கு உணர்த்தி நிற்கிறது.




கேப்பாபுலவுக் கிராமத்தில் பல குடும்பங்கள் தமது விவசாய நிலங்களை இழந்ததால் கூலித்தொழிலையே நம்பி வாழ்கின்றன. இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி அலைகின்றனர். பெண்கள் குடும்பங்களை நடத்தப் பெரும் சிரமங்களைச் சந்திக்கின்றனர். வயதான பெற்றோர்கள் தாங்கள் பிறந்த மண்ணை மீண்டும் ஒருமுறை பார்த்துவிட்டு இறக்க வேண்டும் என்ற ஏக்கத்தோடு வாழ்கின்றனர். பலர் அந்தக் கனவு நிறைவேறாமலேயே உயிரிழந்துள்ளனர். இப்படியாக ஒரு சமூகத்தின் பொருளாதாரம், பண்பாடு, நினைவுகள், மரபு, எதிர்காலம் அனைத்தும் நிலத்தோடு பின்னிப்பிணைந்திருப்பதை கேப்பாபுலவு மக்களின் வாழ்க்கையும் போராட்டமும் நினைவூட்டுகிறது.




## நிலத்தை ஆக்கிரமிக்கும் நல்லிணக்கம்

போர் முடிந்த பின்னர் இனவழிப்பை மறைக்கவும் தொடர் ந்து இனவழிப்பைச் செய்யும் நல்லிணக்கம் குறித்து மாறி மாறி வரும் அரசுகள் பேசுகின்றன. ஸ்ரீலங்கா அரசுக்கு நல்லிணக்கம் என்றால் அர்த்தம் தெரியாது. நிலத்தை ஆக்கிரமிப்பதும் இனத்தை ஒடுக்குவதும் என்று நினைக்கிறது. மக்கள் நிலமின்றி தவிக்கும்போது, அவர்களின் காணிகள்

தொடர்ச்சி: பக்கம் 14




# பொருளாதார சுயசார்பு: தமிழர்களுக்கு மிக முக்கியம்!

வடகிழக்கு தமிழர் தாயகம் தொடர்பில் அனைவரும் கூடிய கவனம் செலுத்தவேண்டிய காலத்தில் இருக்கின்றோம். தமிழ் மக்களின் தமிழ் தேசிய தீர்வினை நோக்கிய பயணத்திற்கு சமாந்தரமாக பல்வேறு விடயங்களில் கவனம் செலுத்தவேண்டிய தார்மீக கடமைகளுக்குள் இன்று அனைவரும் தள்ளப்பட்டிருக்கின்றோம்.

வடகிழக்கிலே இன்றைய அரசியல் சூழ்நிலையிலும் சர்வதேச,தேசிய ரீதியான பொருளாதார கட்டமைப்பு மாற்றங்களுக்கும் ஏற்ப வடகிழக்கில் செயற்பாடுகளை முன்னகர்த்தவேண்டிய பாரிய பொறுப்பு அனைவருக்கும் இருக்கின்றது.

வெறுமனே எமது தீர்வுக்கான பாதையினை மட்டும் முன்னகர்த்திச்செல்வதனால் மட்டும் தமிழ் தேசியத்திற்கான தீர்வினை வெறுமனே பெற்றுவிடமுடியாது. இன்று வடகிழக்கில் காணப்படும் அடிப்படை பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக்கொண்டே நாங்கள் அடுத்தகட்ட நகர்வுக்குள் செல்லவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கின்றது.



வடகிழக்கு மாகாணத்தினை பொறுத்த வரையில் யுத்தத்திற்கு பிந்திய பொருளாதார கட்டமைப்புகள் என்பது பாரியளவிலான பின்தங்கிய நிலையிலேயே இன்றும் காணப்படுகின்றது. யுத்தத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகளினால் பல்வேறு பொருண்மிய துறைகள் உருவாக்கப்பட்டு பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. யுத்தம் செய்தாலும் எமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அது எந்தளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நன்கு அறிந்ததன் காரணமாக தேசிய தலைவரினால் அந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இலங்கையின் முப்பது ஆண்டுகால உள்நாட்டுப் போரினால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதிகள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களாகும். இழந்த வளங்களை மீட்டெடுத்து, நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு நிகராக இப்பிராந்தியங்களை உயர்த்துவதற்குப் பொருளாதார மேம்பாடு இன்றியமையாதது. இயற்கை வளங்களும் மனித வளங்களும் செறிந்த வடகிழக்கின் தற்போதைய பொருளாதார நிலை, சவால்கள் மற்றும் புறக்கணிப்புகள் நிறைந்தவையாக காணப்படுகின்றது.

வடகிழக்கு பிராந்தியங்களின் பொருளாதார வளர்ச்சி என்பது வெறும் அப்பகுதி மக்களின் வாழ்வாதார உயர்வு மட்டுமல்ல, அது முழு நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கும் பங்களிப்பதாகும்.யுத்தத்திற்குப் பின்னரான சூழலில், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை இப்பகுதியில் அதிகமாக உள்ளது. இவர்களுக்கான நிலையான சுய தொழில் வாய்ப்புகளையும் வேலைவாய்ப்புகளையும் உருவாக்குவதற்குப் பொருளாதார முதலீடுகள் மிக முக்கியமாகும். இதனை சிங்கள அரசுகள் செய்வதற்கான எந்த முயற்சிகளையும் இதுவரையில் முன்னெடுக்காத நிலைமையே காணப்படுகின்றது.

தமிழ் தேசிய அரசியல் என்பது வெறும் நிலம், உரிமை மற்றும் அரசியல் தீர்வு சார்ந்த கோரிக்கைகளுடன் மட்டும் சுருங்கிவிட முடியாது. அரசியல் ரீதியான இறையாண்மைக்கு நிகராக, பொருளாதார ரீதியான சுயசார்பும் மிக இன்றியமையாதது. இலங்கையின் வடகிழக்கு மாகாணங்களில், அடிமட்ட அதிகார அமைப்புகளாக விளங்கும் உள்ளூராட்சி மன்றங்களை (மாநகரசபைகள், நகரசபைகள், பிரதேச சபைகள்) வெறும் நிர்வாக அலகுகளாகப் பார்க்காமல், அவற்றை தமிழ் தேசிய அரசியலின் பொருளாதாரக் கோட்டைகளாக மாற்றுவதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும்.

இன்று வடகிழக்கில் உள்ள உள்ளூராட்சிமன்றங்களில் பெரும்பாலானவை வாக்குகளை அடிப்படையாகவும் தத்தமது சுயதேவைகளை அடிப்படையாக கொண்டும் கட்சிசார்ந்த நலன்களை மட்டும் அடிப்படையாக கொண்டே பல சபைகள் இயங்குவதை காணமுடிகின்றது.முறையான திட்டமிடல்களையும் அவற்றிற்கான முதலீடுகளையும் பெறும்போது தமிழர்களின் அடிப்படை பலத்தினை அதிகரிப்பதற்கான சாத்தியங்கள் அதிகளவில் காணப்படுகின்றன.

தமிழ் தேசிய அரசியல் எப்போதும் மத்திய அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீடுகளுக்காகவும், அபிவிருத்திப் பிச்சைகளுக்காகவும் கையேந்தி நிற்கும் நிலையை மாற்றியமைக்க வேண்டும். உள்ளூர் மட்டத்தில் சுயசார்புப் பொருளாதாரத்தை உருவாக்குவதன் மூலமே, அரசியல் பேரம்பேசும் சக்தியை அதிகரிக்க முடியும் என்பதே எனது நிலைப்பாடாகவுள்ளது.

இன்று வடகிழக்கில் நிலவும் தீவிர வேலையில்லாத் திண்டாட்டம் காரணமாக பெருமளவிலான தமிழ் இளைஞர்கள் வெளிநாடுகளுக்கும், கொழும்புக்கும் புலம்பெயர்ந்து செல்கின்றனர். இது தமிழ் தேசியத்தின் வாக்கு வங்கியையும், பிராந்திய மக்கள்தொகை பரம்பலையும் கடுமையாகப் பாதிக்கிறது.

இன்று வடகிழக்கினைப்பொறுத்த வரையில் பெருமளவான வளங்களைக்கொண்ட பிரதேசங்களாக காணப்படுகின்றன.பல்வேறு பொருளாதார ரீதியான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஏதுவான வழிகள் காணப்படுகின்றன. பிரதேச சபைகள் ஊடாக சிறு தொழில்கள், தகவல் தொழில்நுட்ப வழிகாட்டல்கள் மற்றும் விவசாயக் கூட்டமைப்புகளை உருவாக்குவதன் மூலம், இளைஞர்களைத் தத்தமது சொந்த மண்ணில் தக்கவைப்பதற்கான உத்திகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் பல உள்ளூராட்சிமன்றங்கள் காணப்படுகின்றன.அவை வெறுமனே கூடிக்கலையும் ஒரு உள்ளூராட்சிமன்றங்களாகவே இயங்கும் நிலைமைகளைக்காணமுடிகின்றது. கிழக்கில் பெரும் உள்ளூராட்சிமன்றங்கள் தமிழ் தேசிய அரசியலின் கைகளிலேயே உள்ளது. ஆனால் எந்தவிதமான முன்னெடுப்புகளும் இல்லாத நிலையே காணப்படுகின்றது.

திருகோணமலை,மட்டக்களப்பு மாநகரசபை பகுதிகளில் வளங்கள் கொட்டிக்கிடக்கின்றன.ஆனால் அந்த மாநகரசபைகளில் மக்களிடம் வரிப்பணத்தினைப்பெற்று மக்களுக்கு செலவு செய்யும் செயற்பாடுகளே அதிகளவில் நடைபெறுகின்றது.வருமான மூலங்களை இனங்கண்டு அவற்றினை விரவுபடுத்தி தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்தி இளைஞர் யுவதிகளின் எதிர்காலதிட்டங்களை முன்மொழிவதற்கான செயற்பாடுகளை காணமுடியவில்லை. அதற்கு உள்ளூராட்சிமன்றங்களை மட்டும் குறை கூறமுடியாது தமிழ் தேசிய பரப்பில் உள்ள அனைவரும் இதனை ஒரு கடமையாக முன்னெடுப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும்.

தமிழ் தேசியப் பரப்பில் வாழும் புலம்பெயர் தமிழர்கள், தங்களின் தாயக முதலீடுகளை மத்திய அரசாங்க அமைப்புகள் ஊடாகச் செய்யத் தயங்குகின்றனர். உள்ளூராட்சி மன்றங்கள் நேரடியாகப் புலம்பெயர் சமூகத்துடன் தொடர்புகளைப் பேணி, கிராமிய மட்டத்திலான அபிவிருத்திக் கூட்டுத் திட்டங்களை உருவாக்க முடியும்.

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சிமன்றங்களில் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.அவற்றிற்கான நிதியேற்பாடுகளை வழங்கும்போது பாரியளவிலான வளர்ச்சிப்பாதையினை நோக்கி தமிழ் தேசம் நகர்வதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

சோற்றுக்கும் வாழ்வாதாரத்திற்கும் மத்திய அரசில் தங்கியிருக்கும் ஒரு சமூகத்தால் முழுமையான அரசியல் விடுதலையை நோக்கிப் பயணிக்க முடியாது. வடகிழக்கில் உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக முன்னெடுக்கப்படும் பொருளாதார அபிவிருத்தி என்பது தமிழ் மக்களின் வயிற்றுப் பசியை ஆற்றுவது மட்டுமல்ல, அது தமிழ் தேசிய அரசியலின் முதுகெலும்பை நிமிர்த்தும் ஒரு மூலோபாயப் போராயுதமாகும். பொருண்மியச் செறிவும் அரசியல் தெளிவும் இணையும் போதே தமிழ் தேசிய அரசியல் அதன் இலக்கை அடைய முடியும்.வெறுமனே தமிழர்களுக்கான கோரிக்கையினையும் நீதிக்கான போராட்டங்களையும் மட்டுமே நடாத்தி எதனையும் சாதிக்கமுடியாது.

மட்டு.நகரான்



தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் உள்ளூராட்சி மன்றங்களைக் கைப்பற்றுவதை வெறும் "வாக்குப்பலத்தை நிரூபிக்கும்" தேர்தலாக மட்டும் பார்க்கக் கூடாது. மாறாக, அவற்றை "நிழல் தன்னாட்சி அலகுகளாக" மாற்ற வேண்டும். ஒவ்வொரு பிரதேச சபையும் தனது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வறுமையை ஒழித்து, பொருளாதார தன்னிறைவை எட்டும்போது, தமிழ் மக்களின் அரசியல் தன்னாட்சிக் கோரிக்கை சர்வதேச அரங்கில் வெறும் தத்துவார்த்தக் கோரிக்கையாக இல்லாமல், நடைமுறைச் சாத்தியமான ஒன்றாக உற்றுநோக்கப்படும்.

இலங்கையின் தமிழ் தேசியப் பரப்பில் "சுயநிர்ணயம்", "நில உரிமை", "அரசியல் தீர்வு" ஆகிய கோரிக்கைகள் எந்தளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவையோ, அதே அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது "பொருளாதார சுயசார்பு" ஆகும். முப்பது ஆண்டுகால யுத்த அழிவுகள், இடப்பெயர்வுகள் மற்றும் தொடர்ச்சியான பொருளாதாரப் புறக்கணிப்புகளுக்குப் பின்னர், தமிழ் மக்கள் தங்களின் அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள வடகிழக்கின் பொருளாதார பலம் மிக அவசியமான ஒன்றாக மாறியுள்ளது.

• • •

## ஆட்சியை மாற்ற நாங்கள் ... தொடர்ச்சி...

"இந்த நபர்கள் என்னைத் தாக்கி, நாம் ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்தக்கூடாது என்றும், இராணுவ நடவடிக்கையைத் தொடர வேண்டும் என்றும் கூறுகிறார்கள்." "'ஏதாவது நல்லது நடக்கும் வரை குண்டு வீசுவோம்' என்று நீங்கள் சும்மா சொல்லிவிட முடியாது." அந்த அணுகுமுறை ஒருபோதும் பலனளிக்காது.

ஈரானியர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது சாத்திய மற்றது என்று கூறும் அமெரிக்கர்கள் மீது எனக்கு எரிச்சல் வருகிறது. அப்படியானால், உங்கள் தீர்வு என்ன? ஒப்பந்தத்தைத் தாக்குவதற்காக சில செல்வாக்கு மிக்கவர்களுக்குப் பணம் கொடுக்கப்படுகிறது.

ஆட்சியை மாற்றுவதற்காக நாங்கள் 1,50,000 தரைப்படை வீரர்களை அனுப்பப் போவதில்லை. நாங்கள் அத்தகைய நடவடிக் கைகளில் ஈடுபட மாட்டோம். இராணுவத் தலையீடுகள் மற்றும் ஆட்சிகளை மாற்றுவதற்காக ஆயிரக்கணக்கான வீரர்களை அனுப்பும் காலம் முடிந்துவிட்டது. மக்கள் தங்கள் தலைவிதியைத் தாங்களே தீர்மானிப்பதில், எங்கள் இராணுவம் அவர்களுக்குப் பதிலாக வராது என்று அமெரிக்கத் துணை ஜனாதிபதி கூறினார்




இது ஒரு பாதயாத்திரை அல்ல; வாழ்க்கையை மறுபடியும் வாழக் கற்றுத் தந்த ஒரு மாபெரும் அனுபவம் என்றுதான் கூறவேண்டும். வாழ்க்கை பல கோணங்களில் இன்றைய நாட்களில் நகர்கிறது. பல இடங்களில் கண்டும் காணாதது போலத்தான் செல்ல வேண்டியுள்ளது.

இவ்வாறான ஆன்மீகப் பயணங்கள் மக்களின் மனதை ஒருநிலைப்படுத்தி நல்வாழ்விற்கு வழி சமைக்கின்றன என்பது நிஜம்.



நீண்ட நாட்களாக என் மனதில் இருந்த ஒரு ஆசை... இந்த ஆண்டுதான் இறையருளால் நிறைவேறியது. இலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க முருகத் திருத்தலங்களில் ஒன்றாகப் போற்றப்படும் கதிர்காமம் நோக்கி, உகந்தையிலிருந்து அடர்ந்த காட்டுப்பாதை வழியாக ஐந்து நாட்கள் நடந்த அந்த பாதயாத்திரை, என் வாழ்நாளில் அழியாத நினைவாக மாறிவிட்டது.



இந்த ஐந்து நாட்கள், நாங்கள் வாழும் வெளி உலகத்தை விட்டு முற்றிலும் வேறொரு உலகத்திற்குள் நுழைந்ததைப் போன்ற உணர்வை அளித்தன. அங்கே ஆடம்பரம் இல்லை. அவசரம் இல்லை. போட்டி இல்லை. இருந்தது ஒரே ஒரு இலக்கு மட்டுமே — முருகப்பெருமானின் திருவடியை அடைவது.

ஆனால், அந்தப் பயணம் முருகனைச் சந்திப்பதற்கான பாதை மட்டுமல்ல; மனிதனாக எப்படி வாழ வேண்டும் என்பதை கற்றுத் தந்த வாழ்க்கைப் பள்ளியாகவும் அமைந்தது.

அங்கே ஒழுக்கம் இருந்தது. பொறுமை இருந்தது. வரிசைக்கானமரியாதைஇருந்தது.உணவுபெறுவதற்குக்கூட அனைவரும் அமைதியாக வரிசையில் நின்றார்கள். யாரும் தங்களை உயர்ந்தவர்களாக எண்ணவில்லை; யாரும் மற்றவர்களைத் தாழ்ந்தவர்களாகக் கருதவில்லை.



**அங்கே நான் கண்டது மனிதநேயம்.**

ஒருவர் சோர்ந்து நின்றால் மற்றொருவர் கை கொடுத்தார். ஒருவர் தண்ணீர் கேட்டால் பலர் ஓடி வந்தார்கள். ஒருவர் பாரத்தைச் சுமக்க முடியாமல் தவித்தால், அதை இன்னொருவர் தன் தோளில் ஏற்றிக்கொண்டார்.

விட்டுக்கொடுத்தல், புரிந்துணர்வு, காத்திருப்பு, சகிப்புத்தன்மை, அன்பு, அந்நியோன்னியம், பகிர்வு, பரிவு — இவை புத்தகங்களில் மட்டும் படிக்கும் வார்த்தைகள் அல்ல; அந்தக் காட்டுப்பாதையில் உயிரோடு நடந்து கொண்டிருந்த உண்மைகள்.

**அங்கே பதவிக்கு மதிப்பு இல்லை.**

மருத்துவர்கள், நீதிபதிகள், வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள், அரசின் உயரதிகாரிகள், தொழிலாளர்கள், விவசாயிகள், வசதியானவர்கள், எளியவர்கள், சிறுவர்கள், முதியவர்கள் — அனைவரும் ஒரே பாதையில், ஒரே மண்ணில், ஒரே வரிசையில் நடந்தார்கள். அனைவருக்கும் ஒரே அடையாளம் “முருகனின் அடியார்.”



என்னை மிகவும் நெகிழ வைத்தது இலங்கையின் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பக்தர்களின் அன்பும், பாசமும், அரவணைப்பும்தான்.

நான் வடக்குமாகாணம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவன். ஆனால் அந்த ஐந்து நாட்களில், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பக்தர்களோடு இணைந்து நடந்த

தர்சன்

போது, வடக்கு-கிழக்கு என்ற எல்லைகள் அனைத்தும் மறைந்துவிட்டன. நாங்கள் ஒரே குடும்பமாக மாறினோம். இறை அனுபவங்களைப் பகிர்ந்தோம். வாழ்க்கை அனுபவங்களைப் பகிர்ந்தோம் ஒருவரை ஒருவர் ஊக்கப்படுத்தினோம். அன்பு செலுத்தினோம்.

அவர்களின் முருக பக்தி என்னை வியக்க வைத்தது. முருகப்பெருமானை அடைவதற்கு பல வழிகள் இருக்கலாம். ஆனால் இந்த ஐந்து நாள் பாதயாத்திரை, அந்த பக்தியின் ஆழத்தை மனதில் பதியச் செய்கிறது.



அந்தப் பாதையில் நான் கண்ட காட்சிகள் என்றும் என் நினைவில் நிலைத்திருக்கும். கைக்குழந்தைகளை மார்பில் சுமந்தபடி நடந்த தாய்மார்கள். சிறு பிள்ளைகளை தோளில் சுமந்தபடி மலைகளையும், காடுகளையும் கடந்த தந்தையர்கள்.

நடக்க முடியாத வயதான பெற்றோரை கைத்தாங்கலாக அழைத்துச் சென்ற பிள்ளைகள். வலியையும், சோர்வையும் மறந்து அரோகரா என்று முழங்கிய ஆயிரக்கணக்கான பக்தர்கள்.

இவை அனைத்தும் பக்தியின் உச்சத்தை என் கண் முன்னே காட்டின. இந்த ஆண்டில் இதுவரை இல்லாத அளவிற்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கதிர்காமம் நோக்கி நடந்தது, முருகப்பெருமானின் அழைப்பு இன்னும் எத்தனை இதயங்களில் ஒலிக்கிறது என்பதற்கான உயிருள்ள சான்றாக இருந்தது.

இந்த யாத்திரை எனக்கு முருகப்பெருமானை தரிசிக்கும் பாக்கியத்தை மட்டுமல்ல, வாழ்க்கையின் உண்மையான அர்த்தத்தையும் கற்றுத் தந்தது. மனிதன் உயர்வது அவனுடைய பதவியால் அல்ல; அவனுடைய பணிவால்.

மனிதன் பெருமை பெறுவது அவனுடைய செல்வத்தால் அல்ல; பிறருக்குக் காட்டும் அன்பாலும் கருணையாலும். வாழ்க்கையில் ஒரு முறையாவது இந்தக் கதிர்காம பாதயாத்திரையில் கலந்து கொள்ளுங்கள்.

அது உங்களை முருகப்பெருமானிடம் மட்டும் அழைத்துச் செல்லாது. உங்களுக்குள் இருக்கும் உண்மையான மனிதனையும் உங்களுக்கு அறிமுகப்படுத்தும்.

**சொல்வதற்கு இன்னும் நிறையவே இருக்கிறது...**

# இராகலைச் சம்பவம்: மலையகத்தின் நூற்றாண்டுகால நிலமற்ற வாழ்வின் சாட்சியம்




**மருதன் ராம்**

“ஒரு சமூகத்தின் வாழ்வுரிமையின் அடித்தளம் அதன் நில உரிமை.” இந்த அடிப்படை உண்மையை மீண்டும் நினைவூட்டிய சம்பவமாகவே நுவரெலியா மாவட்டத்தின் இராகலை சென்ட் லியோனார்ட்ஸ் (St. Leonard’s) தோட்டத்தில் நீதிமன்ற உத்தரவின் பேரில் ஆறு குடும்பங்கள் வெளியேற்றப்பட்ட சம்பவம் பார்க்கப்படுகிறது. சமூக வலைத்தளங்களில் இது திடீர் வெளியேற்றமாக சித்தரிக்கப்பட்டாலும், பின்னர் வெளியான தகவல்கள் இந்த விவகாரத்தின் பின்னணியில் சுமார் 26 ஆண்டுகள் நீடித்த சட்டப் போராட்டம், உரிமைத் தகராறு, நிர்வாக அலட்சியம் மற்றும் மிக முக்கியமாக மலையக மக்களின் நில உரிமை இல்லாத நிலை ஆகியவை வெளிப்படுகின்றன.



இந்த சம்பவம் ஆறு குடும்பங்களின் பிரச்சினை மட்டுமல்லாது மலையக சமூகத்தின் எதிர்கால வாழ்வுரிமையைப் பற்றிய மிகப் பெரிய தேசிய விவாதமாகும். இராகலை நடுக்கணக்கு (St. Leonard’s) தோட்டத்தில் 1990களில் லயன் குடியிருப்புகளின் கூரைகளைப் புனரமைக்கும் பணிக்காக வந்த தொழிலாளர்களுக்கான தற்காலிக தங்குமிடங்களாக சில வீடுகள் அமைக்கப்பட்டன. பின்னர் அந்த இடத்தில் பெருந்தோட்டத் தொழிலாளர்களைச் சேர்ந்த ஆறு குடும்பங்கள் நிரந்தரமாக குடியமர்த்தப்பட்டனர்.

ஆனால் அவர்கள் வாழ்ந்த சுமார் 16 பேர்ச்சஸ் காணி நீண்டகாலமாக உரிமைத் தகராறுக்கு உட்பட்டிருந்தது. 2000ஆம் ஆண்டு தனியார் ஒருவர் அந்தக் காணிக்கு உரிமை கோரி வழக்கு தொடர்ந்தார். சுமார் 26 ஆண்டுகள் நீடித்த வழக்கின் இறுதி தீர்ப்பு 2025 ஜனவரி மாதம் வழங்கப்பட்ட நிலையில், அதனைத் தொடர்ந்து ஐந்து மாதங்களுக்குப் பின்னர் நீதிமன்ற நடவடிக்கையின் மூலம் அங்கிருந்த ஆறு குடும்பங்களை சேர்ந்தவர்கள் வெளியேற்றப்பட்டனர். பாதிக்கப்பட்ட குடும்பங்கள் வழக்கில் தொடர்ந்து ஆஜராகியிருந்ததாகக் கூறினாலும், இறுதி தீர்ப்பு தொடர்பாக தங்களுக்கு உரிய முறையில் அறிவிக்கப்படவில்லை என்றும், தோட்ட நிர்வாகமும் தங்களது சட்டப் பிரதிநிதிகளும் போதிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அந்த மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

மேலும், குறித்த காணி ஏற்கனவே காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டில் இருப்பதாக 1990களிலேயே அது குறித்து தோட்ட நிர்வாகத் திற்கு அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஒரு ஜனநாயக நாட்டில் நீதிமன்றத் தீர்ப்புகள் மதிக்கப்பட வேண்டும். அதுவே சட்ட ஆட்சியின் அடிப்படையாகும். ஆனால் சட்டம் வெற்றி பெற்ற இடத்தில் மனிதாபிமானம் தோல்வியடையக் கூடாது.

சுமார் 35 ஆண்டுகளாக அங்கு வாழ்ந்து வந்த குடும்பங்கள் ஒரே நாளில் வீடிழந்து தவிக்கும் நிலை உருவாகியிருக்கிறது. குறிப்பாக சிறுவர்கள், முதியவர்கள், பெண்கள் மற்றும் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால்தான் பல அரசியல் தரப்புகளும் சமூக அமைப்புகளும் இந்த குடும்பங்களுக்கு மாற்று வீடுகள், காணிகள் மற்றும் நிவாரணங்கள் உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றன.

### பிரச்சினையின் ஆணி வேர்

இராகலை சம்பவம் தனிப்பட்ட வழக்கு அல்ல. இது பல தலைமுறைகளாக மலையக மக்கள் எதிர்கொண்டு வரும் நில உரிமை இல்லாத வாழ்க்கையின் வெளிப்பாடாகும். பல தொழிலாளர்கள் தலைமுறைகளாக தோட்டங்களில் வாழ்ந்தாலும், அவர்கள் வசிக்கும் காணிகளுக்கு சட்டபூர்வமான உரிமை இல்லை. அவர்கள் வீடுகளை கட்டியிருக்கலாம்.



மின்சாரம் பெற்றிருக்கலாம். வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருக்கலாம். வரி செலுத்தியிருக்கலாம். ஆனால் அவர்கள் வாழும் நிலத்தின் உரிமையாளர்கள் அல்ல. இதுவே எந்த நேரத்திலும் வெளியேற்றப்படக்கூடிய பாதுகாப்பற்ற வாழ்க்கையை உருவாக்குகிறது.இந்த விவகாரத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் ஒருவர் வணிகத்தில் ஈடுபட் டவர்; ஏனையோர் பெருந்தோட்டத் தொழிலாளர்கள்.

ஆனால் அவர்கள் தோட்ட நிர்வாகத்துடன் வழக்கமான முதலாளி - தொழிலாளி உறவில் இல்லாமல் வெளிவாரி முறைமை அல்லது தொழிலுக்கான ஒப்பந்த முறையின் கீழ் செயற்பட்டதாகக் கூறப்படுகிறது. இதனால், தொழிலாளர்களுக்கு முழுமையான தொழில் பாதுகாப்பு இல்லை. வீட்டு உரிமைக்கு சட்ட உத்தரவாதம் இல்லை. முதலாளியின் பொறுப்பும் குறைகிறது. தொழிலாளர்களின் வாழ்வுரிமையும் பலவீனமடைகிறது.

இது பெருந்தோட்டத் துறையில் நீண்டகாலமாக நிலவி வரும் ஒரு அடிப்படை சட்டப் பிரச்சினையாகும். பெருந்தோட்ட முகாமைத்துவ கண்காணிப்பு பிரிவு மற்றும் அரச சொத்துக்கள் மீட்புச் சட்டம் பல சந்தர்ப்பங்களில் தொழிலாளர்களுக்கு எதிராக பயன்படுத்தப்படுவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஒரு தொழிலாளர் தனது வீட்டை சிறிதளவு புனரமைத்தால்கூட “அரச சொத்தை ஆக்கிரமித்தல்” என்ற அடிப்படையில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் நிலை உருவாகியிருப்பதாக பல தரப்புகள் சுட்டிக்காட்டுகின்றன.

சட்டம் மக்களைப் பாதுகாக்க வேண்டுமே அன்றி, மக்களை அச்சுறுத்தும் கருவியாக மாறக் கூடாது. இந்தச் சம்பவம் மீண்டும் ஒருமுறை நிரூபிப்பது என்னவென்றால், தற்காலிக அரசியல் தலையீடுகள் நிரந்தரத் தீர்வல்ல. கடந்த காலங்களில் அரசியல்வாதிகள் அல்லது தொழிற்சங்கங்கள் தொலைபேசி அழைப்புகள், பேச்சுவார்த்தைகள் அல்லது தற்காலிக ஏற்பாடுகள் மூலம் பிரச்சினைகளை சமாளித்திருக்கலாம். ஆனால் அவை எந்தவொரு குடும்பத்திற்கும் நிரந்தரமான நில உரிமையை வழங்கவில்லை. நில உரிமை என்பது சட்டத்தின் மூலம் மட்டுமே உறுதி செய்யப்பட வேண்டும்.



நல்லாட்சி காலத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணி பெருந்தோட்ட மக்களுக்கு 7 பேர்ச் காணி வழங்கும் கொள்கையை உருவாக்கியது. அதன் அடிப்படையில் இந்திய வீட்டுத்திட்டங்கள் உள்ளிட்ட பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. பின்னர் 10 பேர்ச் காணியுடன் கூடிய தனி வீட்டு திட்டமும், “ஆயிரம் காணி உறுதிகள்” வழங்கும் திட்டமும் உருவாக்கப்பட்டது. இந்த திட்டங்களுக்காக பெருந்தோட்ட வீடமைப்பு அமைச்சு, காணி சீர்திருத்த ஆணைக்குழு உள்ளிட்ட பல நிறுவனங்களை ஒருங்கிணைத்த கொள்கை கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

இந்த முயற்சிகள் மலையக மக்களின் நிரந்தர நில உரிமைக்கான முக்கிய முன்னேற்றங்களாகக் கருதப்படுகின்றன. ஆனால் அவை எந்த அளவுக்கு வெற்றி அளித்துள்ளன என்பது இதுவரையிலும் கேள்விக்குறியாகவே உள்ளது. அந்த வகையில் தற்போதைய அரசாங்கம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருந்த சில காணி உறுதிகளை மக்களுக்கு வழங்கியிருந்தாலும், பல பகுதிகளில் இன்னும் வழங்கப்படாத காணி உறுதிகள் உள்ளன. குறிப்பாக கண்டி மாவட்டத்தில் தயாராக இருந்த 210 காணி உறுதிகள் இன்னும் வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

அதேவேளை ஹட்டன் பிரகடனத்தில் வாக்குறுதி அளிக்கப்பட்ட நில உரிமைச் சீர்திருத்தங்கள் நடைமுறைக்கு வராததும் கவலைக்குரிய விடயமாகும். இந்நிலையில் உடனடியாக அரசாங்கம் சில செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று மலையக மக்களும் மலையக தொழிற்சங்க பிரதிநிதிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். அதன்படி வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்ட இராகலையைச் சேர்ந்த 6 குடும்பங்களுக்கு நிரந்தர மாற்று வீடுகள் வழங்கப்பட வேண்டும். பெருந்தோட்ட மக்களுக்கான தேசிய நில உரிமைக் கொள்கை உருவாக்கப்பட வேண்டும்.

காணி உரிமை வழங்கும் திட்டங்கள் விரைவுபடுத்தப்பட வேண்டும். நில உரிமை வழங்கப்படும் வரை தொழிலாளர்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கை

தொடர்ச்சி: பக்கம் 14




A.M.L லம்பேட்

தமிழ்நாட்டில்உருவாகியுள்ளபுதியஅரசியல்தலைமையும், அதனைத் தொடர்ந்து உருவாகும் புதிய அரசியல் சூழலும், உலகளாவிய புலம்பெயர்தமிழருக்கு (Eelam Tamil Diaspora) ஒரு புதிய மூலோபாய ரீதியான இராஜதந்திர பங்களிப்புக்களுக்கான (Strategic Diplomatic Engagement) வாய்ப்பை உருவாக்கியுள்ளது. இருப்பினும், இந்த வாய்ப்பை உணர்ச்சிவசப்பட்ட அரசியல் அணுகுமுறையாக இல்லாமல், கொள்கை ரீதியான (Policy-Oriented Diplomacy), புலம்பெயர் (Diaspora Diplomacy), பொதுவான இராஜதந்திர Public Diplomacy), மற்றும் மூலோபாய கொள்கை ரீதியான கட்டமைப்பு (Strategic Policy Advocacy) ஆகியவற்றின் அடிப்படையில் அணுகுவது காலத்தின் தேவையாகும்.



அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்தேசிய பேரவையினர் தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களைச் சந்தித்திருப்பது, தமிழ்நாடு–ஈழத் தமிழ் உறவின் தொடர்ச்சியை வெளிப்படுத்துகிறது. இருப்பினும், இந்த அடையாள ரீதியான ஒற்றுமை (Symbolic Solidarity) மட்டுமே நீடித்த அரசியல் விளைவுகளை உருவாக்காது. ஆதனை நிறுவன ரீதியான (Institutional Engagement), தந்திரோபாய ஒருங்கிணைப்பு (Strategic Coordination), மற்றும் நீண்டகால இராஜதந்திர அடிப்படையிலான (Long-term Diplomatic Strategy) ஆகியவற்றுடன் இணைக்கும் போது மட்டுமே, இந்தியாவின் கொள்கை அமைப்பில் அர்த்தமுள்ள தாக்கத்தை உருவாக்க முடியும்.

வரலாற்று ரீதியாக, தமிழ்நாடு மற்றும் ஈழத் தமிழர்களுக்கிடையேயான உறவு மொழி, பண்பாடு, இன அடையாளம் மற்றும் மனிதாபிமான ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

எனினும், இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை (Foreign Policy) மாநில அரசுகளால் தீர்மானிக்கப்படுவதில்லை; அது இந்திய மத்திய அரசின் Ministry of External Affairs (MEA), Prime Minister's Office (PMO), National Security Council Secretariat (NSCS) மற்றும் தேசிய பாதுகாப்பு அமைப்புகளின் Strategic Security Calculus அடிப்படையில் வடிவமைக்கப்படுகிறது.


இதனால், தமிழ்நாடு அரசாங்கம் நேரடியாக வெளிநாட்டுக் கொள்கையை மாற்ற இயலாதபோதிலும், அரசியல் செல்வாக்கு (Political Leverage), கூட்டணி அரசியல் செல்வாக்கு Coalition Politics, பாராளுமன்ற ஆதரவு (Parliamentary Advocacy) மக்கள் கருத்துக்கணிப்பு (Public Opinion Mobilisation), மற்றும் மனிதாபிமான அடிப்படையிலான (Humanitarian Diplomacy) வழிமுறைகள் மூலம் மத்திய அரசின் கொள்கை விவாதங்களில் ஒரு சிறிதளவு தாக்கத்தை ஏற்படுத்தும் அரசியல் திறனை கொண்டுள்ளது.



இன்று, இந்தியா–சீனா–அமெரிக்கா இடையிலான உலகளாவிய வல்லரசுகளுக்கிடையிலான போட்டி (Great Power Competition) மற்றும் இந்தோ- பசுபிக்(Indo-Pacific Geostrategy)ஆகியவை இலங்கை தொடர்பான இந்தியாவின் தேசிய பாதுகாப்பு அணுகுமுறையை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகளாக உள்ளன. இதனால், ஈழத் தமிழர் அரசியல் கோரிக்கைகள், இந்தியாவின் சமுத்திர பாதுகாப்பு (Maritime Security), பிராந்திய ரீதியான நிலையான தன்மை (Regional Stability), மற்றும் மூலோபாய தன்னாட்சி (Strategic Autonomy) ஆகிய தேசிய நலன்களுடன் தொடர்புபடுத்தப்பட்டே பரிசீலிக்கப்படுகின்றன.



இந்தச் சூழலில், புலம்பெயர்தமிழரின் தமிழீழம் தொடர்பான இராஜதந்திர நகர்வுகள் (Eelam Tamil Diaspora) முன்னெப்போதையும் விட முக்கியமானதாக மாறியுள்ளது. இவை வெறும் போராட்டங்கள் அல்லது அரசியல் அறிக்கைகளில் மட்டுப்படாமல், ஆதாரங்களின் அடிப்படையிலான கொள்கை ஆய்வுகள் (Evidence-Based Policy Research), சர்வதேச கொள்கை வகுப்பு (International Policy Advocacy), சிந்தனை ரீதியான கட்டமைப்பு (Think Tank Collaboration), Academic Diplomacy, மற்றும் நாடுகடந்த அரசியல் ரீதியான துறைசார் கட்டமைப்புக்கள் (Transnational Political Networking) ஆகிய துறைகளில் விரிவடைய வேண்டும்.



எனவே, எதிர்காலத்தில் புலம்பெயர்தமிழரின் (Eelam Tamil Diaspora) வெற்றி, வரலாற்று நினைவுகளை பாதுகாப்பதில் மட்டுமல்லாது இந்தியாவில் அதனுடைய வெளியுறவுதுறை (Foreign Policy) தமிழ்நாட்டின் அரசியல் செல்வாக்கு, சர்வதேச மனித உரிமை அமைப்புகள் மற்றும் உலகளாவிய கொள்கை வகுப்பு (Policy Networks) ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்த இராஜதந்திர கட்டமைப்பு (Strategic Diplomatic Engagement) ஒன்றை உருவாக்கும் திறனிலேயே அமையும்.

• • •





தமிழில்: **ஆர்தீகன்**

அட்லாண்டாவில் புதன்கிழமையன்று(15) 68,239 ரசிகர்கள் முன்னிலையில் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியின் இரண்டாம் பாதியில், அந்தோனி கார்டன் கோல் அடித்து இங்கிலாந்துக்கு முன்னிலையைத் தேடித்தந்ததால், 1966-க்குப் பிறகு முதல் முறையாக ஃபிஃபா உலகக் கோப்பை இறுதிப் போட்டிக்கு முன்னேறும் பாதையில் அந்த அணி இருந்தது.

ஆனால், லியோனல் மெஸ்ஸியின் உத்வேகத்தால் உலகக் கோப்பை வெற்றியாளரான அர்ஜென்டினா அணி அபாரமாக மீண்டு வந்து 2-1 என்ற கணக்கில் இங்கிலாந்தை வீழ்த்தியது; இதன் மூலம் ஐரோப்பிய சாம்பியனான ஸ்பெயினுடன் இறுதிப் போட்டியில் மோதும் வாய்ப்பை உறுதி செய்தது. இதில் லௌதாரோ மார்டினெஸ் 92-வது நிமிடத்தில் வெற்றிக்கு வழிவகுத்த கோலை அடித்தார்.

இங்கிலாந்தை 2-1 என்ற கணக்கில் வீழ்த்திய நடப்புச் சாம்பியனான அர்ஜென்டினா, மீண்டும் உலகக் கோப்பை இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.



2026 ஃபிஃபா (FIFA) உலகக் கோப்பை இறுதிப் போட்டி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது; இதில் ஐரோப்பாவின் முன்னணி அணியான ஸ்பெயின், தென் அமெரிக்காவின் முதன்மை அணியான அர்ஜென்டினாவை எதிர்கொள்கிறது. ஸ்பெயினை எதிர்கொள்ளவுள்ள அர்ஜென்டினா அணி, ஏற்கனவே 1978 மற்றும் 1986-ஆம் ஆண்டுகளில் கோப்பையை வென்ற நிலையில், தற்போது தனது நான்காவது பட்டத்தை வெல்லும் முனைப்பில் உள்ளது.

ஸ்பெயின் தனது கணக்கில் இரண்டாவது உலகக் கோப்பையைச் சேர்க்க முயலும் நிலையில், அர்ஜென்டினா தனது நான்காவது கோப்பையை வெல்ல விரும்புகிறது. இதற்கிடையில், இங்கிலாந்து அணி சனிக்கிழமையன்று(18) நடைபெறவுள்ள மூன்றாம் இடத்திற்கான போட்டியில் பிரான்ஸை எதிர்கொள்கிறது.

### 2026 உலகக் கோப்பை இறுதிப் போட்டி எப்போது நடைபெறுகிறது?

ஸ்பெயின் மற்றும் அர்ஜென்டினா அணிகளுக்கு இடையிலான உலகக் கோப்பை இறுதிப் போட்டி ஜூலை 19, ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெறும்.

### ஸ்பெயினும் அர்ஜென்டினாவும் கடைசியாக எப்போது மோதின?

ஸ்பெயின் மற்றும் அர்ஜென்டினா அணிகள் கடைசியாக மார்ச் 27, 2018 அன்று மாட்ரிட்டில் உள்ள வாண்டா மெட்ரோபொலிட்டானோ (Wanda Metropolitano) மைதானத்தில் நடைபெற்ற சர்வதேச நட்பு ரீதியிலான போட்டியில் மோதின. அப்போட்டியில் ஸ்பெயின் 6-1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

### உலகக் கோப்பை இறுதிப் போட்டி எந்த நேரத்தில் தொடங்குகிறது?

இப்போட்டி நியூ ஜெர்சியின் ஈஸ்ட் ரதர்ஃபோர்டில் உள்ளூர் நேரப்படி பிற்பகல் 3 மணிக்குத் (GMT நேரப்படி 19:00 மணிக்கு) தொடங்குகிறது.

### இறுதிப் போட்டி எங்கு நடைபெறுகிறது?

உலகக் கோப்பை இறுதிப் போட்டியானது மெட்லைஃப் (MetLife) மைதானத்தில் நடைபெறும். இது 'நியூயார்க் ஜெயண்ட்ஸ்' மற்றும் 'நியூயார்க் ஜெட்ஸ்' ஆகிய இரண்டு நேஷனல் ஃபுட்பால் லீக் (NFL) அணிகளின் சொந்த மைதானமாகும். உலகக் கோப்பைக்காக, இந்த மைதானம் தற்காலிகமாக 'நியூயார்க்-நியூ ஜெர்சி ஸ்டேடியம்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.



பல்நோக்கு பயன்பாட்டைக் கொண்ட இந்த பிரம்மாண்டமான மைதானத்தில், கால்பந்து போட்டிகளின் போது 82,500 பார்வையாளர்கள் வரை அமர்ந்து பார்க்கலாம். இந்த மைதானம் 2025 ஃபிஃபா கிளப் உலகக் கோப்பை இறுதிப் போட்டி மற்றும் இரண்டு அரையிறுதிப் போட்டிகளையும் நடத்தியுள்ளது.

### அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் இறுதிப் போட்டியில் கலந்துகொள்வாரா?

2026 உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் டொனால்ட் ட்ரம்ப் கலந்துகொள்வதை ஃபிஃபா (FIFA) ஏற்கனவே உறுதிப் படுத்தியுள்ளது. வெற்றி பெறும் அணிக்கு அமெரிக்க அதிபர் கோப்பையை வழங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### இடைவேளையின் போது கலைநிகழ்ச்சி (half-time show) நடைபெறுமா?




இப்போட்டியின் வரலாற்றிலேயே முதல் முறையாக, உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் 'சூப்பர் பவுல்' (Super Bowl) பாணியிலான இடைவேளை நேரக் கலைநிகழ்ச்சி இடம்பெறவுள்ளது.




மடோனா, ஜஸ்டின் பீபர், ஷகிரா, பிடிஎஸ் (BTS), பர்னா பாய், குஸ்டாவோ டுடாமெல் மற்றும் கோல்ட்ப்ளே (Coldplay) குழுவுடன் இணைந்து பிஎஸ்22 கோரஸ் (PS22 Chorus) போன்ற பிரபல கலைஞர்கள் இதில் பங்கேற்று நிகழ்ச்சிகளை வழங்குவார்கள்.



இந்தக் கலைநிகழ்ச்சி சுமார் 11 நிமிடங்கள் நடைபெறும் என்றும், இடைவேளை நேரம் 30 நிமிடங்கள் வரை நீட்டிக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், இறுதிப் போட்டி தொடங்குவதற்கு 90 நிமிடங்களுக்கு முன்னதாகவே நிறைவு விழா நடைபெறும். இதில் டாம் குரூஸ், ராபி வில்லியம்ஸ் மற்றும் நிக்கோல் ஷெர்சிங்கர் போன்ற கலைஞர்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### ஸ்பெயின் மற்றும் அர்ஜென்டினா இடையிலான போட்டிக்கான கணிப்பு என்ன?

ஸ்பெயின் அணி நிர்ணயிக்கப்பட்ட ஆட்ட நேரத்தில்

தொடர்ச்சி: பக்கம் 15




# அமெரிக்காவை கொலைக்களத்திற்குள் இழுக்க ஈரான் திட்டமிடுகிறதா?


மீண்டும் அமெரிக்க - ஈரான் போர் தொடங்கியதா? என்ற கேள்விகள் எழுந்துள்ளன. அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்றம்ப்  தாக்குதல்களைத் ஆரம்பித்து அதற்குள், நட்பு நாடுகளை ஒருங்கிணைப்பதில் கவனம் செலுத்துகிறார்.

கடந்த 6 நாட்களாக, புஷெஹர், சபஹார், ஜாஸ்க், கோனராக், அபு மூசா மற்றும் பந்தர் அப்பாஸ் ஆகிய இடங்களில் உள்ள ஈரானிய இலக்குகள் மீது அமெரிக்கப் படைகள் தாக்குதல் நடவடிக்கையை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றன.



ஈரானும் பதில் தாக்குதல்களை குவைத்து, ஐக்கிய அரபு அமீரகம், ஜோர்டான், கட்டார், பகரைன், சிரியா மற்றும் ஈராக்கில் உள்ள அமெரிக்க தளங்கள் மீது மேற்கொண்டு வருகின்றது. இரு தரப்பும் எதிர்த்தரப்பின் மீது கடுமையான இழப்புக்களை ஏற்படுத்தி வருவதாக தெரிவித்து வருகின்றன.

ஈரானின் கடலோரப் பாதுகாப்பு அமைப்புகளை வலுவிழக்கச் செய்வதும், பல வாரங்களுக்கு முன்பே திட்டமிடப்பட்ட சிறப்புப் படைகளின் கடல்-தரை ஒருங்கிணைந்த தாக்குதல்களுக்கு (amphibious assaults) வழிவகுப்பதுமே அமெரிக்காவின் முக்கிய நோக்கமாக இருக்கின்றது. ஈரானின் எண்ணெய் ஏற்றுமதியில் 90 விகித பங்கை வகிக்கும் கார்ச் தீவுகளை கைப்பற்றப்போவதாக ட்றம்ப் மீண்டும் எச்சரித்துள்ளார்.




இஸ்பஹான் அருகே நடத்தப்பட்ட வான்வழி தரையிறக்க சிறப்புப் படை நடவடிக்கை தோல்வியில் முடிந்தாலும், அதை ஒரு விமானியை மீட்கும் நடவடிக்கையாகக் கூறி மறைத்தாலும், ஈரானை வீழ்த்துவதற்கான ஒரே சாத்தியமான வழியாகவே அந்த உத்தி அமெரிக்க வியூகவாதிகளின் மனதில் நிலைத்திருந்தது. இருப்பினும், தற்போது அந்தத் திட்டம் மாற்றியமைக்கப்பட்டு, எண்ணெய் தொடர்பான இடங்கள் மற்றும் கடலோர நகரங்களை இலக்காகக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது.




ஈரானின் சமீபத்திய நடவடிக்கைகளைக் கடுமையாகக் கண்டிப்பதன் மூலம்இ பிரான்ஸ் மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகியவை இந்த வாரம் அமெரிக்காவுடன் இணைந்து செயல்படுவதற்கான தெளிவான சமிக்ஞைகளை வெளிப்படையாக அளித்துள்ளன. ஜெர்மனியுடன் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில், ஹார்முஸ் நீரிணையில் வணிகக் கப்பல் போக்குவரத்தின் மீதும், கத்தார், குவைத், ஓமன் மற்றும் ஜோர்டான் போன்ற வளைகுடா நாடுகளில் உள்ள தளங்களின் மீதும் ஈரான் நடத்திய “கொடூரமான” தாக்குதல்களை ஐரோப்பிய வெளியுறவு அமைச்சர்கள் வன்மையாகக் கண்டித்தனர். மேலும் ஈரான் மீது தடைகளையும் கொண்டுவந்துள்ளனர். பிரித்தானியா ஒரு படி மேலே சென்று ஈரானின் இராணுவத்தை பயங்கரவாதிகளாக பட்டியலிட்டுள்ளது.



ஈரானை ஒரு குற்றவியல் நாடாகச் சித்தரிக்கும் திட்டம், பிரெஞ்சு மற்றும் பிரிட்டிஷ் படைகள் வளைகுடாப் பகுதிக்கு நகர்த்தப்பட்டுள்ளன; இவை வெறும் தற்காப்புக்காக மேற்கொள்ளப்பட்ட படைக் குவிப்பு மட்டுமல்ல.. போர்நிறுத்தக் காலத்திலும் கூட, ஈரானை பொதுமக்கள் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தும் ஒரு ‘பொறுப்பற்ற நாடாக’ (rogue state) சித்தரிக்கும் பிரச்சாரம் தீவிரமாக முன்னெடுக்கப்படுவதற்கு இதுவே காரணம்.

ஆனால் ஈரான் தன்னை “அராஜக அரசு” (rogue state) என்று அழைப்பதைப் பற்றிக் கவலைப்படத் தேவை யில்லை; மேற்கத்தியர்கள் நம்மை எப்படி

வேல்ஸில் இருந்து **அருஸ்**

அழைக்கிறார்கள் என்பது முக்கியமல்ல. அதற்கு எந்த மதிப்பும் இல்லை. அதேபோல, மேற்கத்திய பொதுமக்களின் கருத்து என்ன வாக இருக்கிறது என்பதையும் ஈரான் துளியும் பொருட் படுத்தவில்லை. சக ஈரானியர்கள் மற்றும் நட்பு நாடுக ளின் கருத்துகளுக்கு மட்டுமே ஈரான் முக்கியத்துவம் கொடுக் கின்றது.

எனவே தான் பதிலடியாக, அமெரிக்க - ஈரான் ஒப்பந்தம் (MoU) ஒரு தீவிரமான நெருக்கடியில் சிக்கியுள்ளதாகவும், இனி அது கடைபிடிக்கப்படாது என்றும் ஈரான் அறிவித்தது.



தொடரும் அமெரிக்கத் தாக்குதல்களுக்குப் பதிலடியாக, பாரசீக வளைகுடா நாடுகள் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் மீது ஈரான் ஏவுகணைகளை ஏவித் தாக்குதல் நடத்தியது; இதில் முக்கியத்துவம் வாய்ந்த இலக்குகள் தாக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கத்தாரில் உள்ள அல்-உதீத் விமானப்படைத் தளத்தில், முக்கிய விமானக் கொட்டகை (hangar) மற்றும் பலப்படுத்தப்பட்ட எரிபொருள் சேமிப்புத் கிடங்குகள் ஆகியவை தாக்கப்பட்டன. பஹ்ரைனில் உள்ள ஷேக் ஈசா விமானப்படைத் தளத்தில், ஹெலிகாப்டர் பராமரிப்பு வசதிகள், P-8 மின்னணுப் போர் விமானங்களுக்கான கொட்டகை மற்றும் வான் பாதுகாப்பு கட்டளை மையம் ஆகியவை சேதமடைந்தன. குவைத் கடுமையாகத் தாக்கப்பட்டது; அலி அல்-சலேம் விமானப்படைத் தளத்தின் மீதான தாக்குதல்களில் எரிபொருள் கிடங்குகளும், ஒரு பேட்ரியாட் அமைப்பும் சேதமடைந்தன. மேலும், அகமது அல்-ஜாபர் விமானப்படைத் தளத்தில் ஏற்பட்ட தாக்குதல்களில் FBS ரேடார், ஏவுதளங்கள் மற்றும் ஏவுகணைக் கிடங்குகள் செயலிழக்கச் செய்யப் பட்டன.

ஓமானில், ஈரானியப் படைகள் தொலைதூர FBS வான் கண்காணிப்பு ரேடார் மற்றும் கப்பல் கண்டறியும் ரேடார் ஆகியவற்றை அழித்ததுடன், டுக்ம் துறைமுகத்தில் உள்ள அமெரிக்கக் கடற்படையின் எரிபொருள் நிரப்பும் மற்றும் தளவாடத் தளங்கள் மீதும் தாக்குதல் நடத்தின. இந்தத் தாக்குதல் ஜோர்டான் வரை நீடித்தது; அங்கு கிங் ஹுசைன் விமானப்படைத் தளத்தில் வெடிமருந்துக் கிடங்குகளும் எரிபொருள் தொட்டிகளும் தீக்கிரையாக்கப்பட்டன. ஐக்கிய அரபு அமீரகத்தில், வளைகுடாவில் உள்ள அல் தஃப்ரா விமானப்படைத் தளம் மற்றும் எண்ணெய் துளையிடும் தளங்கள் மீது ஏவுகணைகளும் ஆளில்லா விமானங்களும் தாக்குதல் நடத்தின.

ஹோர்முஸ் ஜலசந்தியின் கடல் பகுதியில், அமெரிக்கப் போர்க்கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும், அமீரகக் கொடியுடன் வந்த இரண்டு வர்த்தக எண்ணெய்க் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும்

தொடர்ச்சி: பக்கம் 14

## ஒரு சர்வதேச ... தொடர்ச்சி...

மதிப்பிடப்பட்டது.

இவ்வினப்படுகொலைகளின் விளைவாக இலங்கைத் தமிழர்கள் பலர் அடுத்தடுத்த ஆண்டுகளில் வெவ்வேறு நாடுகளுக்கு புலம்பெயர்ந்தனர். ஏராளமான தமிழ் இளைஞர்கள் போராளிக் குழுக்களில் சேர்ந்தனர். கறுப்பு யூலை என்பது பொதுவாக தமிழ் போராளிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான இலங்கை உள்நாட்டுப் போரின் தொடக்கமாகக் கருதப்படுகிறது கறுப்பு யூலை மாதம் உலகெங்கிலும் உள்ள புலம்பெயர் ஈழத் தமிழரின்நினைவு மாதமாக நினைவு கூரப்படுகிறது.

• • •

## கேப்பாபுலவு மக்கள் ... தொடர்ச்சி...

இராணுவப் பயன்பாட்டில் தொடர்வதுதான் ஸ்ரீலங்கா அரசின் நல்லிணக்கமா? கேப்பாபுலவு மாத்திரமின்றி, வலிவடக்கு, மயிலிட்டி, வட்டுவாகல் உள்ளிட்ட பகுதிகளிலும் மக்கள் தமது பூர்வீக நிலங்களை மீட்க இன்னும் போராடி வருகின்றனர். இந்தப் போராட்டங்கள் அனைத்தும் நிலம் என்பது வெறும் சொத்தல்ல; அது வாழ்வுரிமை, வரலாறு, அடையாளம், நினைவு, எதிர்காலம் மற்றும் மரபுரிமை என்பதையே வலியுறுத்துகின்றன.

ஆட்சிகள் மாறினாலும், ஜனாதிபதிகள் மாறினாலும், ஈழத் தமிழர்களின் நில உரிமைப் போராட்டம் இன்னும் முடிவடையவில்லை. ஒரு ஜனநாயக அரசின் பொறுப்பு மக்களின் சொத்துரிமையைப் பாதுகாப்பதாகும். போர் முடிந்து இவ்வளவு ஆண்டுகள் கடந்த பின்னரும் பொதுமக்களின் காணிகளை இராணுவக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. நில உரிமை என்பது அடிப்படை மனித உரிமை. எனவே, கேப்பாபுலவு மக்களின் இத்தனையாண்டு கால அமைதிப் போராட்டத்திற்கு இலங்கை அரசு உடனடியாக நீதியான தீர்வை வழங்க வேண்டும். மீதமுள்ள அனைத்து காணிகளும் எந்த நிபந்தனையும் இன்றி உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட வேண்டும். தமது மண்ணில் மீண்டும் வீடு கட்டி, விவசாயம் செய்து, தமது பிள்ளைகளுடன் வாழும் உரிமை கேப்பாபுலவு மக்களுக்கு மீண்டும் கிடைக்க வேண்டும்.

• • •

## இலங்கையின் நீதி ... தொடர்ச்சி...

உயர்த்தப்பட்டுள்ளமை துரதிர்ஷ்டவசமானது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. செம்மணிப் பகுதிக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த இலங்கையின் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, 1998-ஆம் ஆண்டுச் சம்பவங்கள் குறித்து அரசாங்கத்திடம் போதிய தகவல்கள் இல்லை என்றும், பாதிக்கப்பட்ட குடும்பத்தினரே இதற்கான பொறுப்பானவர்களை அடையாளம் காட்ட வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

அமைச்சரின் இந்த கூற்றானது, அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் குறைபாட்டையே காட்டுகின்றது என்று சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டத்தின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

சாட்சியங்களின் வாக்குமூலங்கள், நீதிமன்ற ஆவணங்கள் மற்றும் இராணுவத் தரவுகள் என செம்மணி விவகாரம் தொடர்பில் போதிய ஆதாரங்கள் உள்ளன.

எனவே, இதனை வெறும் தடயவியல் அகழ்வுத் தளமாக மட்டும் பார்க்காமல், புதிய மற்றும் முழுமையான விசாரணைகளை முன்னெடுப்பதற்கான வலுவான சான்றாகக் கருத வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், தங்களது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறியாமல் பல தசாப்தங்களாகக் காத்திருக்கும் குடும்பங்களின் வேதனையை வெளிப்படுத்தும் வகையில் பெற்றோர்களால் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

முறையான பொறுப்புக்கூறல் இல்லாமை, அதிகாரத் துஷ்பிரயோகம் தொடர்வதற்கும், அரசு கட்டமைப்புகள் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையைச் சீர்குலைப்பதற்கும் வழிவகுக்கும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

## எண்ணெய் விலை 110... தொடர்ச்சி...

ஒவ்வொரு நாள் முற்றுகையும் இராணுவ நடவடிக்கைகளும் இப்போது குறுகிய கால நிர்ப்பந்தத்திற்கு ஈடாக நான்காம் காலாண்டின் வேதனையை முன் வைக்கின்றன. வளைகுடா நீரிணையைப் பாதுகாக்கும் குழாய்த்தொடர்கள் 2027-ல் வந்து சேரும். ஆனால் தேர்தல் முதலில் வந்து சேரும் என அது தெரிவித்துள்ளது.

LENIO
Architectural Planning | Structural Design | Party Wall Agreement
Sadadcharam Easwaran (Easan)
BEng MSc DIC CEng C.BuildE MICE MCABE MFPWS
Director
+44 (0) 20 4558 8272
+44 (0) 7831 199 962
easan@leniogroup.com
www.leniogroup.com
5a St. James's Road
Croydon, CR0 2SB
ice cabe FPWS




## அமெரிக்காவை கொலைக் ... தொடர்ச்சி...

ஈரான் உரிமை கோரியுள்ளது. இறுதியாக, ஈராக்கில் அமெரிக்கப் படைகளைத் தங்க வைத்திருந்த இரண்டாம் நிலை இராணுவத் தளங்கள் மீதும் குண்டுவீச்சு நடத்தப்பட்டது. ஒரு பேட்ரியாட் அமைப்பும் சேதமடைந்தது. இந்தத் தாக்குதல் பல வாரங்களுக்கு நீடிக்கும் என்று ட்ரம்ப் காங்கிரசுக்குத் தெரிவித்துள்ளார். அதாவது, பிற நாடுகளில் இருந்து இடைமறிப்பு ஏவுகணைகளையும் விமான எதிர்ப்பு பீரங்கிகளையும் இடமாற்றம் செய்யவும், புதிய இடங்களில் ரேடார்களை மீண்டும் நிறுவவும், எல்லாவற்றிற்கும் மேலாக, அதிக உபகரணங்களை முன்னணிக்குக் கொண்டு வரவும் இந்த போர்நிறுத்தம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

சமீபத்திய தாக்குதல்களில் இது தெளிவாகத் தெரிந்தது; அவற்றில் கடல்சார் ட்ரோன்கள் முதல் முறையாகப் பயன்படுத்தப்பட்டு வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டன.

வெளிப்படையாக, ஈரானும் தனது ஏவுகணை உற்பத்தி, புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல்களைத் துரிதப்படுத்துகிறது. ஏறக்குறைய 1,000 கி.மீ தொலைவில் உள்ள ஜோர்டானில் உள்ள இலக்குகளை ஈரானிய ஏவுகணைகள் துல்லியமாகத் தாக்கியதே இதற்குச் சான்றாகும்.

எனவே ஈரான் அமெரிக்கா விரித்த வலையில் சிக்குவதாக தோன்றவில்லை. நிச்சயமாக அவர்கள் இதை முன்கூட்டியே கணித்திருப்பார்கள். தாங்கள் செய்வதாகக் கூறியதையே அவர்கள் செய்து வருகிறார்கள்; ஒவ்வொரு கட்டத்திலும் அவர்கள் அப்படித்தான் செயல்பட்டு வந்துள்ளனர். அமெரிக்காவுடனோ அல்லது நேட்டோவுடனோ மோத நேரிட்டாலும், அவர்களால் உலகப் பொருளாதாரத்தைச் சீர்குலைக்க முடியும்.

ஈரானியர்கள் எத்தனை அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளை அமைத்துள்ளனர் என்பதை அறியாமலேயே நடத்தப்படும் நீர்நிலத் தாக்குதல். ஐ.ஆர்.ஜி.சி என்ன செய்கிறது என்பது எந்த ஈரானிய அரசியல்வாதிக்கும் தெரியும் என்று நான் நினைக்கவில்லை. நாசவேலை காரணமாகவே அவர்கள் இந்தத் தந்திரங்களை அரசியல்வாதிகளிடமிருந்து மறைக்கிறார்கள்.

அமெரிக்காவிடம் ஒரு நீர்நிலத் தாக்குதல் நடத்தும் திட்டம் இருப்பது போல, ஈரானும் இராணுவத்தைத் திரட்டி ஒரு திட்டத்தை வகுத்துள்ளது. அதாவது, முன்கூட்டியே தயார் செய்யப்பட்ட தனது பாதுகாப்பு மண்டலத்திற்குள் அமெரிக்காவைத் தாக்குதல் நடத்த வைத்து, அதை ஒரு கொலைக்களமாக மாற்ற ஈரான் திட்டமிட்டுள்ளது. யார் சிறப்பாகத் திட்டமிடுகிறார்கள் என்பதை பொறுத்தே போரின் போக்கு தீர்மானிக்கப்படும்.

• • •

## இராகலைச் சம்பவம் ... தொடர்ச்சி...

களுக்கு தற்காலிக சட்டத் தடை விதிக்கப்பட வேண்டும். பெருந்தோட்ட முகாமைத்துவ கண்காணிப்பு பிரிவு உள்ளிட்ட அமைப்புகளின் அதிகாரப் பயன்பாட்டில் வெளிப்படைத்தன்மை கொண்டுவரப்பட வேண்டும். பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ள காணி உறுதிகள் அரசியல் பாரபட்சமின்றி மக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகள் தற்போது வலுத்துள்ளன.

இராகலை சென்ட் லியோனார்ட்ஸ் சம்பவம் ஒரு நீதிமன்ற வழக்கின் முடிவு மட்டுமல்ல. அது மலையக மக்களின் நூற்றாண்டு கால நிலமற்ற வாழ்வின் பிரதிபலிப்பாகும். வீடுகள் கட்டிக்கொடுத்தால் மட்டும் போதாது. மின்சாரம் வழங்கினால் போதாது. நலத்திட்டங்கள் அறிவித்தாலும் போதாது. ஒரு சமூகத்திற்கு அதன் வாழ்வுரிமையை உறுதிப்படுத்துவது “சட்டபூர்வமான காணி உரிமை” ஊடாக மட்டுமே முடியும். எனவே, இனிமேலும் இத்தகைய சம்பவங்கள் நிகழாமல் இருக்க அரசாங்கம், அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், சிவில் சமூகங்கள் மற்றும் கொள்கை வடிவமைப்பாளர்கள் அனைவரும் இணைந்து மலையக மக்களுக்கான நிரந்தர காணி உரிமைச் சட்டத்தை உருவாக்க வேண்டும். மலையக மக்களின் சமூக நீதிக்கும், பொருளாதார சுதந்திரத்திற்கும், தலைமுறை பாதுகாப்பிற்கும் காணி உரிமையே அடித்தளமாகும். அந்த உரிமை உறுதி செய்யப்படும் நாளே உண்மையான விடுதலை நாளாக அமையும்.

• • •

## அமெரிக்காவின் தேசியக்... தொடர்ச்சி...

அதிகமாக இருப்பதால், இந்த மாபெரும் சேவைச் செலவானது, உள்கட்டமைப்பு, புத்தாக்கம் மற்றும் சமூகத் திட்டங்களுக்கான முக்கிய செலவினங்களைக் குறைத்து வருகிறது. இது நாள்பட்ட பற்றாக்குறைகளால் இயக்கப்படும் ஒரு கட்டமைப்புப் பிரச்சினையாகும்.

செலவினங்கள், உரிமைகள் அல்லது வருவாய் ஆகியவற்றில் அர்த்தமுள்ள சீர்திருத்தம் இல்லாமல், இந்தப் பாதை கணிதரீதியாகத் தாங்க முடியாததாகி, எதிர்காலப் பொருளாதார வளர்ச்சி மற்றும் ஸ்திரத்தன்மையை ஆபத்தில் ஆழ்த்துகிறது. இன்றைய தேவைகளுக்காக, நாளைய தேவைகளுக்காக நாம் பெருமளவில் கடன் வாங்குகிறோம் அமெரிக்க பொருளியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

• • •

## ‘புதுக்கூட்டு’ கட்சிகளின்... தொடர்ச்சி...

கட்சிகளுமே வரலாறு காணாத பேரிடியையும், தங்களின் அரசியல் அடித்தளத்தையே உலுக்கிய பெரும் பின்னடைவையும் நேருக்கு நேர் சந்தித்தன.

முஸ்லிம் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று, அந்த மக்களின் தனிப்பெரும் சக்தியாக விளங்கிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸும், அண்மைய தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அலையிடம் தங்களின் கோட்டைகளை இழந்தன.

வடகிழக்கில் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று தம்பட்டம் அடித்த இலங்கை தமிழ் அரசுக் கட்சியும், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியும் தங்களுக்குள் அடிபட்டு, மக்களின் கடுமையான நிராகரிப்புக்கு உள்ளாகி, வரலாற்றில் என்றுமில்லாத வகையில் பாராளுமன்ற ஆசனங்களை இழந்து சிதறின.

மலையகத்தில் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகளைத் தங்களின் குடும்பச் சொத்தாக நினைத்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸும், தமிழ் முற்போக்கு கூட்டணியும் கூட, தேசிய மக்கள் சக்தியின் புதிய அரசியல் அலையினால் தங்களின் பாரம்பரிய செல்வாக்கு அசைத்துப் பார்க்கப்பட்டு, முகவரி இழந்து நிற்கின்றன.

இவ்வாறு தங்களின் சொந்த மக்கள் கூட்டத்தினாலேயே தூக்கியெறியப்பட்டு, கடுமையான அரசியல் சவால்களையும், இருப்புக்கான அச்சுறுத்தலையும் எதிர்கொண்டுள்ள இந்த ஆறு கட்சிகள் தான், இன்று தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ‘தமிழ்ப்பேசும் மக்கள்’ என்ற போர்வையில் ஒரு தற்காலிகக் கேடயத்தை உருவாக்க முயல்கின்றன.

இது மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான தளம் அல்ல. மாறாக மூழ்கும் கப்பலில் இருக்கும் ஆறு மாலுமிகள் ஒண்டாகச் சேர்ந்து தங்களின் அரசியல் ஆயுளை நீடிப்பதற்காகப் போடும் பிழைப்புவாதக் கூட்டாகும். மக்களின் பிரச்சினைகளை முன்னிறுத்தி வீதியில் இறங்கிப் போராடுவதற்கோ அல்லது ஒரு வலுவான மாற்று அரசியல் கூட்டணியாக உருவெடுப்பதற்கோ இவர்களிடம் எந்தவொரு திராணியும் இல்லை, அதற்கான சாத்தியக்கூறுகளும் மிக மிக அரிதாகவே தென்படுகின்றன.

ஏனென்றால், இந்த ஆறு கட்சிகளினதும் அரசியல் நலன்களும், அவர்கள் இயங்கும் தளம் மற்றும் உள்வாங்கப்பட்டுள்ள சர்வதேச, பிராந்திய அரசியல் நிரல்களும் முற்றிலும் வெள;வேறானவை. போருக்குப் பின்னரான கடந்த 17 ஆண்டு கால வரலாற்றில், ஒரே கொள்கையைக் கொண்ட தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளைக்கூட ஒரு பொதுத்தளத்தில் ஒன்றிணைத்து நிலையாகச் செயற்பட வைக்க முடியாமல் இராஜதந்திரத் தோல்வியே மிஞ்சியுள்ளது.

இத்தகையதொரு சூழலில், வடகிழக்கில் சுய நிர்ணய உரிமையுடன் கூடிய ‘சமஷ்டி’யைக் கோரும் தமிழ் அரசுக் கட்சியின் கொள்கையும்; வடகிழக்குக்கு வெளியே வாழும் தங்களின் மக்களின் பாதுகாப்பையும் பொருளாதார நலன்களையும் மட்டுமே பிரதானமாகக் கருதும் மலையகக் கட்சிகளின் கோரிக்கைகளும்; வடகிழக்கு இணைப்பைக் கடுமையாக எதிர்த்து, கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்கென்று ஒரு தனியலகைக் கோரும் முஸ்லிம் கட்சிகளின் நிலைப்பாடும் எவ்வாறு ஒரே புள்ளியில் இணைய முடியும்?

இந்தக் கொள்கை ரீதியான முரண்பாடுகள் எரியும் நெருப்பாக உள்ளுக்குள் இருக்கும் வரை, வெறும் ‘தமிழ்ப்பேசும் கட்சிகள்’ என்ற ஒற்றை வார்த்தையை வைத்துக் கொண்டு இவர்களை ஒரு நீண்டகாலக் கூட்டணியாகச் செயற்பட வைப்பது என்பது பகற்கனவாகும். இந்த ஆறு கட்சிகளின் அவசரக்கூட்டு என்பது, மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான விடிவெள்ளி அல்ல. மாறாக தங்களின் வீழ்ச்சியுற்ற அரசியல் சாம்ராஜ்யங்களை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக, மக்களின் உணர்வுகளை மீண்டும் ஒருமுறை மூலதனமாக்கத்துணியும் சிறுபான்மைத் தலைமைகளின் சுயநல நாடகமே தவிர வேறொன்றுமில்லை.

ஏனென்றால் 2016ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் கூட்டு ஆட்சியில் புதிய அரசியலமைப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது, தமிழ்முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், மற்றும் ஈழமக்கள் ஜனநாயக்கட்சி ஆகியவை ஒன்று சேர்ந்து வழிநடத்தல் குழுவுக்கு அரசியல் தீர்வுக்கான முன்மொழிவைச் செய்திருந்தன என்பதையும் இங்கே மீள நினைவு படுத்துவது குறித்த தரப்பினரின் தமிழ் பேசும் மக்களின் மீதான அந்தக் கட்சிகளின் ஆழ்ந்த அக்கறையையும், இணைந்தை செயற்பாட்டையும் அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றதல்லவா?

## மன்னார் கனிம ... தொடர்ச்சி...

உறுதியளித்திருந்தார்.

இருந்த போதிலும், தற்போது அந்த வாக்குறுதிகளைப் புறந்தள்ளிவிட்டு, சுற்றுச்சூழல் ரீதியாக எளிதில் பாதிக்கப்படக்கூடிய மன்னார் மாவட்டத்திலேயே இந்த ஆபத்தான கனிம மணல் அகழ்வுக்கான முதலாவது திட்டத்துக்கு அரசாங்கம் ஒப்புதல் வழங்கியுள்ளதாக சுவஸ்திகா அருளிங்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடற்கரைப் பரப்பளவில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கு பகுதியில் அகழ்வு மற்றும் தேடல் பணிகளுக்காக 300க்கும் அதிகமான அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் பல அனுமதி பத்திரங்கள் ஏற்கனவே சுரங்க அகழ்வு அனுமதி பத்திரங்களாக மாற்றப்பட்டுள்ளன. இந்த அகழ்வுப் பணிகளால் கடற்கரையை நம்பியிருக்கும் ஆயிரக்கணக்கான மீனவர்கள், நிலத்தடி நீரை நம்பியிருக்கும் விவசாயிகள் மற்றும் கடலோர சமூகங்களின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்படுவதோடு, இலங்கைக் கடற்கரையை நாடி வரும் உயிரினங்களான கடல் ஆமைகள் போன்ற பல்லுயிர்களும் முற்றாக அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுவஸ்திகா அருளிங்கம் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் இந்த அகழ்வுப் பணிகளில் ஈடுபடவுள்ள ‘கேபிட்டல் மெட்டல்ஸ்’ போன்ற நிறுவனங்கள், முன்னதாக லைபீரியாவில் சுரங்க வணிகத்தில் ஈடுபட்டிருந்தபோது முழு கிராமங்களையே பலவந்தமாக அப்புறப்படுத்தி கொடூரமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகவும் அவர் குற்றச்சாட்டை முன் வைத்தார்.

இதன் காரணமாக ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு பேரவை வரை அந்நாட்டின் விவகாரம் கொண்டு செல்லப்பட்டதாகவும் சுற்றுச்சூழல் பொருளாதார பாதுகாப்பு அமைப்பின் பிரதிநிதி சுவஸ்திகா அருளிங்கம் தெரிவித்துள்ளார்.

## ஃபிஃபா உலகக் ... தொடர்ச்சி...

இறுதிப் போட்டியை வெல்வதற்கான வாய்ப்பு 45.1 சதவீதம் என்றும், அர்ஜென்டினா வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு 29.4 சதவீதம் என்றும் ஆப்டா (Opta) நிறுவனத்தின் சூப்பர் கம்ப்யூட்டர் கணக்கிட்டுள்ளது.

கூடுதல் நேரம் (extra time) அல்லது பெனால்டி (penalties) முறைக்கு ஆட்டம் செல்வதற்கான வாய்ப்பு 25.4 சதவீதமாக உள்ளது.


### 2030 உலகக் கோப்பை எங்கு நடைபெறவுள்ளது?

அடுத்த உலகக் கோப்பைத் தொடர் மொராக்கோ, ஸ்பெயின் மற்றும் போர்ச்சுகல் ஆகிய நாடுகளில் நடைபெறும். இறுதிப் போட்டி நடைபெறும் நகரம் இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்றாலும், மாட்ரிட் நகரம் அதற்கான முன்னணியில் உள்ளது.

இப்போட்டியின் 100-வது ஆண்டு நிறைவு விழாவின் ஒரு பகுதியாக, 1930-ல் முதல் உலகக் கோப்பையை நடத்திய உருகுவே மற்றும் அர்ஜென்டினா, பராகுவே ஆகிய நாடுகளில் நூற்றாண்டு விழாப் போட்டிகள் (centenary matches) நடைபெறும்.

**நன்றி: அல்ஜசீரா**




## தற்போதைய அரசாங்க... தொடர்ச்சி...

கொண்டு அந்தக் கட்சிகளின் தலைவர்கள் இந்த முடிவை எடுத்துள்ளனர் என்றும் அவர் கூறினார். தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகளில் வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் திருப்தி அடையவில்லை என்றும் சி.வி.விக்னேஸ்வரன் கூறினார்.

அந்த மக்களின் நிலங்கள் இராணுவத்தால் மேலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமையே அதற்குக் காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். சில நிலங்களில் பயிர்ச்செய்கை செய்வதன் மூலம் இராணுவம் வருமானம் ஈட்டி வருவதாகவும் சி.வி.விக்னேஸ்வரன் வெளிப்படுத்தியுள்ளார்

இத்தகைய உண்மைகளின் காரணமாக, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் தமிழ் மக்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என்று எதிர்பார்க்க இயலாது எனவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கமும் தமிழ் மக்களை இரண்டாம் தரக் குடிமக்களாக நடத்துவதாகவும், சம உரிமைகளை வழங்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .



- சி.கிருத்திகா -
3 ஆம் கட்டை



- இ.ஜோயல் -
செல்வநாயகபுரம்

# ஆசிரியர் அமைவது வரம்

நான் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தவள். சிறுவயதிலே போரினால் அம்மா, அப்பா இருவரையும் இழந்து அம்மாவின் அண்ணா வீட்டிலேயே வளர்ந்தேன் . என்னை அவர்கள் நன்றாகத்தான் ஆரம்பத்தில் கவனித்தனர், அவர்களுக்கு என்று ஒரு குழந்தை வரும் வரையிலே. ஆம், தங்கை பிறந்தாள். ஏனோ தெரியவில்லை அவ்வளவுகாலம் பிள்ளையாய் பார்த்தவர்கள் என்னை பாரமாய் பார்க்கத்தொடங்கினர். எனது மாமி என்னை துன்புறுத்த தொடங்கினாள். உணவு தர , பள்ளி செல்ல மறுத்தார். இருந்தும் நான் அவர் சொல்லுகின்ற வேலைகளை வேகமாக முடித்து விட்டு பாடசாலைக்கு செல்வேன்.

நான் சாதாரணமாக படிக்கும் மாணவி. என்னால் அதிக பெறுபேறுகளை எடுக்கமுடியவில்லை. வீட்டிலோ படிக்கமுடியாத சூழ்நிலை. பாடசாலையில் பாடங்கள் நடக்கும் போது மட்டுமே போனது என் படிப்பு. ஆனால் இதெல்லாம் அவர் வரும் வரை தான் . ஆம், என் வகுப்பாசிரியர் கீதா ஆசிரியர் . ஆசிரியர் பணியே அறப்பணி அதற்கே உன்னை அர்ப்பணி என்னும் வாசகத்திற்கு உருவமாய் வந்தவர்.

என் முழு வாழ்கையையும் மாற்றியவர் அவரே. எங்களை பற்றி கேட்டு தெரிந்தவர், எங்களுடன் சிறிது சிறிதாக பழக ஆரம்பித்தார். எனக்கும் எனது நண்பர்களுக்கும் எமது திட்டங்களை ஒழுங்கமைப்பு செய்து தந்தார். மாலைநேர வகுப்பு எடுத்தார். "உன்னால் முடியும், நீ பெரிய ஆளாக வருவாய்" என்று தினமும் ஊக்கப்படுத்தினார். முக்கியமாக ஒன்றைச் சொன்னார். "இந்த உலகம் உன்னை மதிக்க வேண்டுமெனில் அவர்கள் மதிக்கத்தக்கவனாக நீ மாற வேண்டும். அதற்கு நீ படிக்க வேண்டும் என்று எப்போதும் சொல்லுவார். அவரது அன்பும் ஆதரவும் எனக்கு புது நம்பிக்கை கொடுத்தது.நான் கடுமையாக உழைத்தேன். இரவு நேரங்களில் வேகமாக வேலையை முடித்துவிட்டு படிக்க ஆரம்பித்தேன். அவரது ஊக்குவிப்பில் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் "9 A" பெற்றேன். பின் க.பொ.த உயர்தர பரீட்சையில் உயிரியல் பிரிவில் "3 A" பெற்று அகில இலங்கையில் முதலிடத்தைப் பெற்றேன். இப்போது கொழும்பு வைத்தியசாலையில் தலைமைத்துவ வைத்தியராக கடமையாற்றுகிறேன். என் பெற்றோரின் தியாகத்தாலும், கீதா ஆசிரியரின் ஊக்கத்தாலும் தான் இன்று நான் உயர்ந்த நிலையில் இருக்கின்றேன்.

வறுமை ஒரு தடை இல்லை. கடின உழைப்பும், ஒருவரின் நம்பிக்கையான வார்தையும் ஒரு வாழ்க்கையையே மாற்றிவிடும் என்பதை என் வாழ்க்கை அனுபவத்திலிருந்து கற்றுக்கொண்டேன்.

- தனுகா -
விசுவமடு

# தாயே....

என் வாழ்வில் நான்
கண்ட முதல் உயிர்...
எனக்கு வாழ்க்கை
கொடுத்த உயிர்...
என்னுயிரே நீ இன்றி
நான் இல்லை.. நான்
இன்றி நீ இல்லை..
நாம் இன்றி இவ்
உறவே இல்லை...
என் பிஞ்சு கால்களால்
நான் அஞ்சி நடக்கும்
போதெல்லாம்
- உன் அழகிய
கரங்களை தந்து உன்
பாதையில் வழி நடத்தி
சென்றாயே...

எவ்வளவு உறவு
என்னை தேடி
வந்தாலும் எவ்
உறவுகள் என்னை
விட்டு சென்றாலும்
என்னுடன் என்றும்
ஓர் அணையாய்
விளக்காய் நிற்பது
என் தாய் நீ
மட்டுமே...
அன்றும் இன்றும்
என்றும் உன்
அன்பிற்கும் உன்
அரவணைப்பிற்கும்
ஏங்கி துடிக்கும் ஓர்
உயிர் ...
உன்னுயிர்...
எத்தனை ஜென்மம்
எடுத்தாலும்
என் பிறப்பு
என்றும்
உன்னிடத்தேயே...

மு.ஹறு.ஷமீரா
பாளையூற்று

# தாயகமும் வாழ்வும்





